# நாணயவியல்



ந. சௌந்திரபாண்டியன்

வெளியிடுபவர் :

**சோ.சு. ஜவஹர்,** இ.ஆ.ப.

முதன்மை செயலர் மற்றும் அருங்காட்சியகங்களின் ஆணையர்,

அரசு அருங்காட்சியகம்,

சென்னை–600 008.

**2011**

# நாணயவியல்

ந. சௌந்தரபாண்டியன்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
கரூர்—639 001

வெளியிடுபவர்

**சோ.சு. ஜவஹர்,** இ.ஆ.ப.
முதன்மை செயலர் மற்றும் அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை—600 008.

முதற் பதிப்பு-2011

எண்ணிக்கை: 500

© அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை-8.

விலை: ரூ. 70/-

Published with the financial assistance received from the Ministry of Culture, Government of India and Government of Tamil Nadu.

Printed at Government Central Press, Chennai-600 079.

# நாணயவியல்

பக்கங்கள்

பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | i |
| முன்னுரை | ii |
| இந்தியாவில் நாணயங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி | 1 |
| சங்க இலக்கியத்தில் காசுகள் | 2 |
| சங்க கால சேரர் காசுகள் | 3 |
| சங்க கால சோழர் நாணயங்கள் | 5 |
| சங்க கால பாண்டியர் நாணயங்கள் | 6 |
| முத்திரை நாணயங்களின் தோற்றமும் வளர்ச்சியும் | 6 |
| குஷானர் நாணயங்கள் | 11 |
| சாதவாகனர் கால நாணயங்கள் | 12 |
| உருத்ரசேனர் கால நாணயங்கள் | 12 |
| குப்தர் கால நாணயங்கள் | 12 |
| ஹர்ஷவர்த்தனர் கால நாணயங்கள் | 13 |
| மேலைச் சாளுக்கியர் நாணயங்கள் | 13 |
| கீழைச் சாளுக்கியர் நாணயங்கள் | 13 |
| பல்லவர் நாணயங்கள் | 13 |
| ஜகதேகமல்லர் நாணயங்கள் | 16 |
| பிருதிவிராஜ் – இராஜபுத்திரவம்சக் காசுகள் | 16 |


276-10—1a

பக்கங்கள்


| | |
|---|---|
| பிற்காலச் சோழர் நாணயங்கள் | 16 |
| கொங்கு சோழர் நாணயங்கள் | 17 |
| பாண்டியர் நாணயங்கள் | 18 |
| கேரள நாணயங்கள் | 21 |
| டெல்லி சுல்தான் நாணயங்கள் | 21 |
| ஷெர்ஷா நாணயங்கள் | 22 |
| முகலாயர் நாணயங்கள் | 22 |
| வாணாதிராயர் நாணயங்கள் | 22 |
| விஜயநகர நாணயங்கள் | 23 |
| நாயக்கர் கால நாணயங்கள் | 25 |
| மைசூர் சுல்தான் நாணயங்கள் | 27 |
| மைசூர் உடையார் நாணயங்கள் | 28 |
| ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி நாணயங்கள் | 28 |
| அம்மன் காசு | 29 |
| மராட்டியர் கால காசுகள் | 29 |
| சிவகங்கை சீமையின் சீரிய தமிழ்க் காசு | 30 |
| பூதலவீரக் காசுகள் | 31 |
| திருவிதாங்கூர் நாணயங்கள் | 31 |

பக்கங்கள்


| | |
|---|---|
| பழங்குடிகளின் நாணயங்கள் | 34 |
| அகாரா நாணயங்கள் | 34 |
| அரும்பரா நாணயம் | 34 |
| உதேஹாகி நாணயம் | 35 |
| குறைபாடுள்ள நாணயங்கள் | 35 |
| நாணயங்கள் அச்சடித்த இடங்கள் | 35 |
| பழங்காலத்தில் நாணயங்கள் அச்சடிக்கும் முறை | 36 |
| முத்திரை நாணயங்களின் ஆக்கம் மற்றும் நாணயங்கள் செய்முறை | 38 |
| சாதவாகனர் கால நாணயம் அச்சிட்ட கருவி | 39 |
| முத்திரை நாணயங்கள் தயாரிக்கும் பழங்கால சுடுமண் அச்சு | 39 |
| நாணயங்கள் எண்ணும் அச்சு மரப் பலகை | 40 |
| கி.பி. 1949--க்குப் பின் நாணயம் அச்சிட்ட முறை | 41 |
| நாணயங்களைப் பாதுகாக்கும் முறைகள் | 43 |
| (அ) தங்க நாணயங்கள் பாதுகாக்கும் முறை | 43 |
| (ஆ) செப்புக் காசுகளைத் தூய்மை செய்யும் முறை | 43 |
| (இ) நாணயங்களைப் பாதுகாக்கும் பொதுவான முறை | 44 |
| (ஈ) மின்னாற்பகுப்பு முறை | 45 |
| ஒளிப்படங்கள் | |
| மேற்கோள் நூல்கள் | |

திரு. சோ.சு. ஜவஹர், இ.ஆ.ப.,
அருங்காட்சியகங்களின் ஆணையர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை-600 008.

தொலைபேசி : 044-2819 3778
நகரி : 044-2819 3035

# அணிந்துரை

கரூர் மாவட்ட அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் திரு. ந. சௌந்திரபாண்டியன் பண்டமாற்று முறை தொடங்கி, பேரரசு வாரியாக நாணயங்களைக் கால வரிசையில் அறிமுகப்படுத்தி "நாணயவியல்" எனும் நூலைத் தொகுத்து அளித்துள்ளார்.

இந் நூலாசிரியரின் முயற்சி பாராட்டுதற்குரியது. அருங்காட்சியகத் துறையின் வெளியீடாக இந் நூலைக் கொணர்வதில் மகிழ்வெய்துகிறேன்.

தமிழில் "நாணவியல்" குறித்து ஒரு சில நூல்களே இதுவரை வந்துள்ளமையால், இந் நூல் தமிழ் ஆர்வலர்களால் வரவேற்கப்படும் என்று நம்புகிறேன்.

சென்னை—8.
10—10—2009

சோ.சு. ஜவஹர், இ.ஆ.ப.

# முன்னுரை

நாணயவியல் குறித்துப் பல்வேறு கட்டுரைகளும், நூல்களும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இருப்பினும், தமிழில் நாணயவியல் பற்றிய நூல்கள் மிகச் சிலவே இதுவரை பதிக்கப்பட்டுள்ளன. இக் குறையை நீக்கும் முயற்சியின் முதற்கட்டமாகத் தமிழில் 'நாணயவியல்' எனும் தலைப்பில் ஒரு தொகுப்பு நூலை உருவாக்கி உள்ளேன்.

இந் நூலினை அருங்காட்சியகத் துறை வெளியீடாகக் கொணர முன்வந்த திரு. சோ.சு. ஜவஹர், இ.ஆ.ப., அருங்காட்சியகங்களின் ஆணையர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைப் படைத்து மகிழ்கிறேன்.

நாணவியலில் ஆர்வமுள்ள பொதுமக்கள், மாணவ, மாணவியர் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு இந் நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன்.

(ரு. சௌந்திரபாண்டியன்)

# இந்தியாவில் நாணயங்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

பண்டை காலத்தில் நம் இந்திய மக்கள் பண்டமாற்று முறையிலேயே பொருட்களைப் பரிமாறிக் கொண்டனர். ஏறத்தாழ கி.மு. ஆறாம் நூற்றாண்டில்தான் நம் இந்திய நாட்டில் நாணயங்கள் தோன்றியதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

நாணயங்கள் தோன்றுவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஹரப்பா நாகரிகம் நம் நாட்டில் வேரூன்றிவிட்டது. சிந்து நதிப் பள்ளத்தாக்கை மையமாகக் கொண்ட இந்த நாகரிகம் நாட்டின் பெரும் நிலப்பரப்பில் பரவி, இந்திய வரலாற்றில் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுவிட்டது. நகரங்களில் மக்கள் மிகுதியாகக் குடியேறினர்.

அந்தக் கால கட்டத்தில் ஹரப்பா மக்களுக்கும், எகிப்து உட்பட்ட மேற்காசிய மக்களுக்கும் வணிகத் தொடர்பு இருந்து வந்தது. நாகரிக முதிர்ச்சி அடைந்த அவர்கள் தங்கள் பொருட்களின் உரிமையைக் குறிக்க முத்திரைகளைப் பொறித்தனர். நிறுத்தல், முகத்தல் உள்ளிட்ட அளவைகளைப் பயன்படுத்தினர். இந்த அளவை முறைகள் உள்நாட்டு வணிகத்திலும் வெளிநாட்டு வணிகத்திலும், பெரிதும் மேற்கொள்ளப்பட்டன.

மிகச் சிறந்த வணிக வளர்ச்சி பெற்றிருந்தாலும் பண்டைய இந்தியர்கள் நாணயத்தைப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் வணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேதான் நடந்ததாகக் கருதப்படுகின்றது. உலோகத்தையும் ஒரு பண்டமாகவே இவர்கள் கருதினர். குறிப்பிட்ட எடையுள்ள ஓர் உலோகத்திற்கு நாணயத்தின் மதிப்பு வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

''ஹரப்பா மக்கள் தானியங்களையே தங்களின் சிறந்த செல்வமாகக் கருதினர்'' என்று மார்டிமர் வீலர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஹரப்பா மக்களை அடுத்து நாகரிகம் அடைந்த ஆரியர் தொடக்க காலத்தில் கால்நடை மேய்ப்பவர்களாகவும் பின்னர் உழவர்களாகவும் மாறினர்.

அவர்கள் தொடக்கத்தில் கால்நடைச் செல்வங்களையும் தானியங்களையும் பண்டமாற்றுப் பொருட்களாகப் பயன்படுத்தினர் என்று அறிய இடமுண்டு. பண்டைக் காலத்தில் அரிசி சிறந்த பண்டமாற்றுப் பொருளாகத் திகழ்ந்தது.

## சங்க இலக்கியத்தில் காசுகள்

காசு என்பது பல்பொருள் குறித்த ஒரு சொல். சங்க நூல்களில் காசு என்பது (1) பொற்காசு, (2) கலன், (3) மணி என்ற பொருட்களில் கையாளப்படுகின்றது. பண்டைத் தமிழ் மகளிர் காசுகளை மேகலையோடு சேர்த்து அணிந்திருக்கின்றனர். ஐங்குறுநூற்று உரையாசிரியர் "பாண்டில் – பொன்னால் வட்டமாகச் செய்யப்படுவதோர் அணிவகை– இதைச் சுற்றி மணிகள் கோர்த்து மேகலையோடணிதல்" பண்டை மரபாதலின் "பொலம்பசு பாண்டிற்காசு நிறையல்குல்" என்றனர் என்று கூறிப் பின்னும் "பொன்செய் பாண்டிற் பொலங்கலம் தந்த" என்ற வரிக்குப் பொன்னாற் செய்யப்பட்ட பாண்டிலாகிய பொன்னணி நெகிழ்ந்தொழிய என்றும் உரைகூறி விட்டுப் பொலங்கலத்தை விளக்கும்போது பாண்டிலைச் சுற்றிக் கோர்க்கப்படும் பொற்காசுகள் ஈண்டுப் பொலங்கலம் எனப்பட்ட படி, பொற்கலம், பொலங்கலம் என வந்தது என்று குறிக்கின்றனர். இவற்றால், பண்டைத் தமிழ் மகளிர் காசுகளை ஒரு வகை அணிகலனாகக் கையாண்டிருக்கின்றனர் என்பது தெளிவாகிறது.

அத்தகைய காசுகள் பொன்னால் செய்யப்பட்டிருந்தன என்பதை அறியலாம். "பொன்செய் காசு" என்று நற்றிணையும் "பொலங்குல ஒரு காசு", "பொலஞ்செய் கிண்கணிக் காசு" என்று குறுந்தொகையும் "பொலங்காசு", "பொலஞ்செய் காசு" என்று அகநானூறும், காசானது பொன்னால் செய்யப்பட்டதற்கு நேரடிச் சான்று தருகின்றன.

பண்டமாற்றத்தில் தோன்றிய சிக்கல்களே நாணயக் கண்டுபிடிப்பிற்கு காரணமாயிற்று என்பது பொதுவான கருத்து. சங்க காலத்தில் நடந்த உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் பண்டமாற்றிலேயே நடந்திருக்கிறது. வெளிநாட்டு வணிகம் தோன்றிய போது, உள்நாட்டில் செய்தது போல் எளிதாகப் பண்டமாற்று முறைகளை மேற்கொள்ள இயலவில்லை. எனவே, முத்து மற்றும் நெல்லிக்காய் அளவிலான தங்கக் கட்டிகளைப் பரிமாறிக் கொண்டனர்.

பொன்னாலாகிய காசுகள் சங்க காலத்தில் வழக்கில் இருந்தன என்பதும் அவை வேப்பம் பழ வடிவிலும் நெல்லிக் காய் போன்ற உருண்டையான வடிவிலும் அமைந்திருந்தன என்பதும் இவை காசுகளாக வணிகத் தொழிலில் பயன்படுத்தப்பட்டன என்பதும் செய்திகளாக அமைகின்றன.

## சங்க கால சேரர் காசுகள்

### சேரர் காசுகள் (முதல் வகை)

இக் காசுகள் செம்பிலும் நீண்ட சதுர வடிவத்திலும் காணப்படுகின்றன. முன் பக்கத்தில், வலது பக்கம் நோக்கி நிற்கும் யானையும், அதற்கு மேல் பண்டைத் தமிழ் எழுத்துக்களும் பின் பக்கத்தில், சேரர்களின் இலச்சினையான வில்லும் அம்பும் கீழே அங்குசமும் காணப்படுகின்றன. கருவூரில் கிடைத்த சங்க கால சேரர் காசுகளில் எல்லாம் யானைக்கு மேலே மங்கலச் சின்னங்கள்தாம் உள்ளன. ஆனால், இந்த காசில் சில எழுத்துக்கள் தெளிவற்ற நிலையில் இருப்பதால் எந்த சேர மன்னனால் இது வெளியிடப்பட்டது என்று உறுதியாகக் கூற இயலவில்லை. இரும்பொறை மன்னர்கள் வெளியிட்ட கொல்லிப்புறைக் காசுகள் கருவூரில் கிடைத்துள்ளன. இரும்பொறை மன்னன் ஒருவரால் இந்தக் காசு வெளியிடப்பட்டிருக்கலாம்.

### மாக்கோதைக் காசு (இரண்டாம் வகை)

அமராவதி ஆற்றுப் படுகையிலிருந்து கிடைத்தவற்றுள் ஒன்று "சேரமான் மாக்கோதையின்" பெயருடனும் உருவத்துடனும் காணப்படுகிறது. இது, தமிழக நாணய வரலாற்றிலேயே மிகச் சிறப்பான கண்டுபிடிப்பாகும். இக் காசு கிடைக்கும் வரை, சங்க கால மன்னர்களின் பெயர்களோ, உருவங்களோ பொறித்த வெள்ளிக் காசுகள் கண்டெடுக்கப்படவில்லை.

காசின் முன்புறத்தில், பண்டைத் தமிழ் எழுத்துக்களும் அதன் கீழ் நடுவே வலப்புறம் நோக்கிய அரசனின் மார்பளவு உருவமும் காணப்படுகின்றன. இக் காசின் பின்புறம், எவ்வித சின்னமும் இல்லாமல் உள்ளது. அரசனின் தலைக்கு மேல் "மாக்கோதை" என்று எழுதப்பட்டுள்ளது.

"ம" என்ற எழுத்தில் குறுக்குக் கோடு சற்று வலப்புறம் நீட்டப்பட்டு இருப்பதாலும் "த" என்ற எழுத்து வளைந்து காணப்படுவதாலும் இந்த எழுத்தின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதி என்று கொள்ளலாம்.

சங்க இலக்கியத்தில் சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை (புறம் 52) சேரமான் கோக்கோதை மார்பன் (அகம் 63), சேரமான் குட்டுவன் கோதை (புறம் 54) போன்ற பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த வெள்ளிக் காசு மேற்கூறிய மன்னர்களுள் ஒருவரால் வெளியிடப்பட்டது எனலாம்.

**சேரர் காசுகள் (மூன்றாம் வகை)**

சங்க காலச் சேர மன்னர்களின் வரலாற்றை அறிய இலக்கியச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கப் பெற்ற நூல்களுள் "பதிற்றுப் பத்து" ஒரு கருவி நூலாக உள்ளது. அதில் முதற் பத்தும் கடைசிப் பத்தும் இப்போது கிடைக்காத காரணத்தால், முதலில் ஆட்சி செய்த சங்க காலச் சேர மன்னர் யார்? என்று வரையறுத்துக் கூற இயலவில்லை. ஆயினும், இரு வழிச் சேர மன்னர்கள் ஒரே காலத்தில் பூசல்கள் ஏதுமில்லாத நிலையில் ஆண்டு வந்தமை இந்நூலின்மூலம் அறியக் கிடைக்கின்றது. அந்துவன் சேரன் இரும்பொறை என்பவர் பொறையர் குல முதல்வன் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவரது காலம் யாது என்பது தெரியவில்லை. இரும்பொறைப் பிரிவு மன்னர்கள் பதிற்றுப் பத்தின் 7 ஆம் பத்து முதல் 9 ஆம் பத்து வரையில் உள்ள பாக்களின் பாட்டுடைத் தலைவர்கள். சங்க காலத்தில் இவர்களது ஆதிக்கம் கணைக்கால் இரும்பொறையின் ஆட்சியோடு முடிவடைகிறது.

இரும்பொறை மன்னர்கள் வெளியிட்டுள்ள இரு வகை நாணயங்கள் இதுவரை கிடைத்துள்ளன. அவையாவன —

(அ) கொல்லிப்பொறைக் காசு — முன்புறத்தில் தோரண வாயிலின் உள்ளே ஓர் அரசனின் நிற்கின்ற உருவம் உள்ளது. விளிம்பில், பண்டைத் தமிழ் எழுத்துக்களில் "கொல்லிப்புறை" என்று எழுதப்பட்டுள்ளது. இதன் பின்புறம், வில்லும் அம்பும் உள்ளன. மலையின் உருவம் வளைவுகளாகக் காட்டப்பட்டுள்ளது. ஒரு சதுரத்தின் உள்ளே உள்ள உருவம் தேய்ந்து, தெளிவற்ற நிலையில் காணப்படுகிறது.

இக் காசு "கொல்லிப் பொறையன்" என்பவரால் வெளியிடப்பட்டது என்று கருதப்படுகிறது. இக் காசின் பின்புறம் "வில்" சிறப்பாக உள்ளது.

(ஆ) கொல்லிரும்பொறைக் காசு – இது "கொல்லிப்புறை" என்று பெயர் பொறிக்கப்பட்ட காசினை ஒத்தது. ஆனால், இறுதியில் "அன்" விகுதி பெற்று கொல்லிப்புறையன் என்ற பெயருடன் மற்றொரு காசு கிடைத்துள்ளது. இக் காசு வடிவமைப்பில் வட்டமாகவும் தடித்தும் சில சின்னங்களையும் தன்னகத்தே தாங்கியுள்ளது. இந்தச் காசின் முன்புறத்தில் தோரணவாயிலின் நடுவே கம்பீரமான தோற்றத்துடனும் வலது கையில் ஒரு போர் ஆயுதத்துடனும் ஓர் அரசனின் முழு உருவம் தோற்றமளிக்கிறது. மன்னனின் இடது பக்கம் நெடிய வேலியிட்ட மரம் ஒன்றும் வலது பக்கம் மூன்று மீன்கள் ஒன்றன்பின் ஒன்றாக மன்னரின் பாதங்களுக்குக் கீழாக வேலியிட்ட மரத்தை நோக்கி நீந்தும் நிலையில் காணப்படுகின்றன.

## சங்க காலச் சோழர் நாணயங்கள்

சங்க காலச் சோழர் நாணயங்கள் மிகக் குறைந்த அளவிலேயே கிடைத்துள்ளன. சங்க காலப் பாண்டியர்களை போல சோழர்கள் மிகுதியான நாணயங்களை வெளியிட்டதாகத் தெரியவில்லை. சங்க கால சோழர் நாணயங்களில் எழுத்துப் பொறிப்பு எதுவும் காணப்படவில்லை.

சங்க காலச் சோழர் நாணயங்களில் முன்புறம் யானை, அணி செய்யப்பட்ட குதிரைகள் பூட்டிய தேர், யானையும் குதிரையும், வேலியிட்ட மரம், விலங்கும் மரமும், குடை, வேலாயுதம் போன்ற சின்னங்கள் உள்ளன. இதன் பின்புறத்தில், புலிச் சின்னமே பெரிதும் காணப்படுகிறது. புலி தனது வலது காலைத் தூக்கி, வாயைப் பிளந்து, தலையை நிமிர்த்தி அதன் நுனி வளைந்திருக்கும் அமைப்பிலேயே காணப்படுகிறது. ஒரு சில நாணயங்களில் புலியுடன் கதிரவன் சின்னமும் காணப்படுகிறது.

சங்க காலச் சோழர் நாணயங்களில் எவ்வித எழுத்துப் பொறிப்பும் இன்மையால், அவற்றில் காணப்படும் இலச்சினைகளைக் கொண்டுதான் காலத்தைக் கணக்கிட வேண்டி உள்ளது.

யஹூதேய நாணயங்களில் காணப்படும் வேலியிட்ட மரச் சின்னம் மிக முக்கியமானது. இச் சின்னம் தான் சங்க காலச் சோழர் நாணயங்களின் கால ஆராய்ச்சிக்குரிய அடிப்படைச் சான்றாக அமைகின்றது.

## சங்க காலப் பாண்டியர் நாணயங்கள்

சங்க காலப் பாண்டியர்களுடைய நாணயம் சதுரமாக உள்ளது. ஒருபுறம் யானை பொறிக்கப்பட்டு, மறுபுறம் வெற்றிடமாக உள்ளது. அல்லது இரட்டை மீன் சின்னம் அழகுற பொறிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில், இராமநாதபுரம் அழகன்குளத்தில் நடந்த அகழ்வாராய்ச்சியின்போது ஏராளமாகச் சங்க காலப் பாண்டியர் நாணயங்கள் கிடைத்துள்ளன. இந் நாணயங்களில் அஷ்டமங்கலக் குறியீடுகளும் உள்ளன.

## முத்திரை நாணயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

கி.மு. 6–ஆம் நூற்றாண்டில், இந்திய மக்கள் வாழ்க்கை முறையிலும் பண்பாட்டிலும் புதிய திருப்பம் ஏற்பட்டது. சமய, அரசியல் துறைகளில் மட்டுமின்றிப் பொருளியல் நோக்கிலும் இப்புதிய திருப்பம் மாறுதலை ஏற்படுத்தியது.

அதுவரை நிலவிய குறுநில மன்னர்களின் ஆட்சி முறைகள் மாறி, பெரும் நிலப் பரப்பை உள்ளடக்கிய பேரரசு முறைகள் தோன்றின. இந்த மாற்றத்திற்குக் கிரேக்கர்களும் பாரசீகர்களும் முக்கிய காரணம் என்று கருதப்படுகிறது.

இந்த கால கட்டத்தில் பல புதிய சமயக் கோட்பாடுகளும் புதிய பல வணிக மையங்களும் தோன்றின. வணிகமும் தொழில் வளமும் பெருகின. இதனால், உலோக நாணயத்தின் தேவை ஏற்பட்டது. இத் தேவையை நிரப்ப வந்தனவே முத்திரை நாணயங்கள். இருப்பினும், முத்திரை நாணயங்களின் தோற்றம் பற்றி ஒருமித்த கருத்து இல்லை. கி.மு. 6–ஆம் நூற்றாண்டிற்கு முன்பே அவை தோன்றியிருக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

## முத்திரை நாணயக் குறியீடுகள்

முத்திரை நாணயங்களில் பல்வகைக் குறியீடுகள் உள்ளன. அவற்றுள் கதிரவன், மலை, மரங்கள், கிளைகள், மனித வடிவங்கள், முயல், நாய், தேள், பாம்பு முதலியன குறிப்பிடத்தக்கவை.

கதிரவன், மலைகள், மரங்கள், ஆவிகள், விலங்குகள், பாம்புகள் போன்றவற்றை பண்டைக் காலத்தில் இந்திய மூதாதையர் வழிபட்டு வந்தனர். பண்டைய நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் முந்தைய வேத கால நூல்களிலும் பின் வந்த வேத நூல்களிலும் காணக்கிடக்கின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டே, முத்திரை நாணயங்கள் கி.மு. 6—ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டனவாக இருக்கலாம் என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

## முத்திரை நாணயங்கள் பரவிய முறை

முத்திரை நாணயங்கள்தாம் இந்தியாவில் முதன் முதலாகத் தோன்றிய நாணயங்களாகக் கருதப்படுகின்றன. இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் அவை பரவியிருந்தன. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அவை கண்டெடுக்கப் பட்டுள்ளன. வடமேற்குப் பகுதியிலிருந்து தென்கோடியிலுள்ள திருநெல்வேலி மாவட்டம் வரை முத்திரை நாணயங்கள் கிடைத்துள்ளன.

அப்புதையல்கள் கிடைத்த பகுதிகளில் அந் நாணயங்கள் புழக்கத்திலிருந்தன என்பதை உணர முடிகிறது.

அந்த நாணயங்களைப் "புராண காசுகள்" என்று அழைக்கின்றனர். "புராண" என்றால் "பழைய" எனப் பொருள்படும்.

## நந்தர்களின் தொண்டு

முத்திரை நாணயங்கள் நந்தப் பேரரசின் காலத்தில் இந்திய நாடு முழுவதும் விரிவாகப் பரவியிருந்ததாகக் கருதப்படுகிறது. நந்தர்களின் ஆட்சியில் நாடு மிகச் செல்வச் செழிப்புடன் திகழ்ந்தது.

மக்களிடமிருந்து ஏராளமான வரிப் பணத்தைப் பெற்று நந்தப் பேரரசு மிகக் கவனமுடன் நிலைத்திருந்தது. நந்த குல அரசர்கள் இந்த நாணயங்களுக்கு நிலையான வடிவமும் மதிப்பும் வழங்கினர் என்று கருத இடமுண்டு.

## மௌரிய நாணயங்களும் உள்ளூர் நாணயங்களும்

மௌரியர் ஆட்சிக் காலத்திலும் முத்திரை நாணயங்கள் நாடு முழுவதும் பரவியிருந்தன. மௌரிய முத்திரை நாணயங்கள், முந்தைய நாணயங்களைக் காட்டிலும் பெரிதும் மாறுபடவில்லை. அந் நாணயங்கள் மௌரியர் ஆட்சி முடிவுற்ற பின்னரும் பல நூற்றாண்டுக் காலம் புழக்கத்தில் இருந்தன.

மௌரியப் பேரரசின் முத்திரை நாணயங்களைத் தவிர உள்ளூர் முத்திரைநாணயங்களும் அந்தப் பகுதிகளில் வழங்கி வந்தன. தட்சசீலம், காந்தாரம் ஆகிய பகுதிகளில் வழங்கிய நாணயங்கள் மௌரியர் காலத்திற்கும் முந்தியவை.

## உள்ளூர் முத்திரை நாணயங்கள்

உள்ளூர் முத்திரை நாணயங்களைக் குறுநில மன்னர்கள் வெளியிட்டனரா? அல்லது வணிகக் குழுக்கள் வெளியிட்டனவா? என்பதை நமக்குக் கிடைத்துள்ள முரண்பாடான செய்திகளைக் கொண்டு முடிவு எடுக்க இயலவில்லை.

உள்ளூர் முத்திரை நாணயங்களைப் பொறுத்த மட்டில், எடையளவும் குறியீடுகளும் உலோகமும் பலதரப்பட்டவை.

## நாணயத்தை மதிப்பிடச் சீரான எடைகள்

பேரரசின் முத்திரை நாணயங்கள் வடக்கிழக்கிலிருந்தோ தெற்கிலிருந்தோ எங்கு கிடைத்தவையாக இருப்பினும் அவை ஒரே எடையளவிலேயே அமைந்துள்ளன.

நாணயச் சாலையிலிருந்து வெளிவந்த புதுமைப் பொலிவோடு, தேய்மானம் ஏதுமின்றித் தென்படும் புதிய நாணயங்கள் 3.3 முதல் 3.5

கிராம் எடையுள்ளனவாக உள்ளன. அவற்றில் ஒரே சீராக ஒரு புறத்தில் ஐந்து குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதனால், சீராக அமைக்கப்பட்ட ஓர் அரசோ, வணிகக் குழுவோ இவற்றை வெளியிட்டிருக்கலாம் என்பதை அறிய முடிகிறது.

தமிழகத்தில் கிடைத்துள்ள மிகப் பழமையான நாணயங்கள் வெள்ளி முத்திரை நாணயங்களே ஆகும். அவை 3.3 முதல் 3.5 கிராம் வரை எடையுள்ளவை.

முத்திரை நாணயங்களை நன்கு ஆய்வு செய்ததில் ஐந்து முத்திரைகளையுடைய முத்திரை நாணயங்கள் மகதப் பேரரசை ஆண்ட அஜாதசத்ருவின் ஆட்சிக் காலத்தில் தான் முதன்முதலாக வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அவர் ஆட்சிக்காலம் கி.மு. 552–520 வரை என்று கருத இடமுண்டு. அவர் ஆட்சிக் காலத்திலும் சில இவர் வழிவந்தவர்கள் ஆட்சிக் காலத்திலும் நாணயங்கள் வழக்கிற்கு வந்திருக்க வேண்டும்.

அடுத்ததாக நாணயங்கள் மகதப் பேரரசை ஆண்ட சிசுநாக அரசனால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். இவர் ஆட்சிக் காலம் கி.மு. 440–400 வரையுள்ள காலமாகும். இவர் வழிவந்தவர்கள் இந்த நாணயங்களை வெளியிட்டு இருக்கலாம்.

மகதப் பேரரசை நந்தர்கள் கைப்பற்றியவுடன் 4–ஆம் வரிசை நாணயங்களை வெளியிட்டிருக்கின்றனர். நந்தர்களின் ஆட்சியை சந்திரகுப்த மௌரியர் கி.மு. 324–ஆம் ஆண்டில் முடிவுறச் செய்தார்.

நாணயங்கள் சரியான எடையுள்ளவாக இருக்க வேண்டுமென்பதற்காக அக் காலத்தில் தகடுகளைச் சிறு, சிறு துண்டுகளாக வெட்டி எடுத்திருக்கின்றனர்.

முன் பக்கத்தில் ஐந்து முத்திரைகள் பொறிக்கப்பட்டுப் பெரும்பாலும் நந்தர்களாலும் மௌரியர்களாலும் வெளிப்பட்ட இவற்றிற்குக் "கர்ஷப் பண" என்று பெயர். பெரும்பாலும் இவற்றின் எடை 3.4 கிராம். இவற்றில் எவ்வித எழுத்தும் பொறிக்கப்படவில்லை.

எழுத்துக்களுக்குப் பதிலாகக் குன்றுகள், மரங்கள், பறவைகள், விலங்குகள், ஊர்வன போன்ற உருவங்களைப் பலவகைகளில் பொறித்துள்ளனர். சமய அடையாளங்கள், சதுரம், முக்கோணம் போன்ற வடிவங்களையும் பொறித்துள்ளனர்.

**குறியீடுகள் உணர்த்தும் வரலாற்றுச் சான்றுகள்**

நாணயங்களில் உள்ள குறியீடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்திற்காக அல்லது குறிக்கோளுக்காகப் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வகை நாணயத்திற்கு இந்தச் சின்னம் அல்லது இந்த இடத்தில் வழங்கும் நாணயத்திற்கு இவ்வகை அடையாளம் என்று முத்திரையிட்டிருக்கின்றனர்.

எனவே, எந்தெந்த நாணயங்கள் எந்தெந்த இடத்திற்குரியவை என்பதையும் எந்தெந்த அரசிற்குரியவை என்பதையும் எந்தெந்தக் காலத்திற்குரியவை என்பதையும் நாம் எளிதாக வகைப்படுத்தி விடலாம்.

**நாணயங்களின் முன்னும் பின்னும்**

அக்கால நாணயங்களில் ஒரு புறம் மட்டும்தான் முத்திரைச் சின்னங்கள் பொறிக்கப்பட்டன. இதனை முன்புறம் எனக் கொள்ளலாம். பின்புறம் எவ்வித முத்திரைச் சின்னமுமின்றி வெறுமையாக ஏதாவது சிறிய அடையாளங்களை முத்திரையிட்டிருக்கின்றனர். ஆனால், அச் சிறு அடையாள முத்திரைகளை நாணயச் சாலைகளில் இடவில்லை. மாறாகப் புழக்கத்திற்கு வந்த பின்னர் அந் நாணயங்களை முத்திரையிட்டுக் கொண்டனர்.

அஜாதசத்ருவின் ஆட்சிக் காலத்தில் 5–ஆம் வரிசையிலுள்ள நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவருக்குப் பின்வந்த பிந்து சாரரின் ஆட்சியிலும் இவ் வரிசை நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம்.

மௌரியப் பேரரசர் அசோகர் காலத்திய 6–ஆம் வரிசை நாணயங்களில் சில மாறுபட்ட நாணயங்களும் உள்ளன. இவை அம் மன்னனின் ஆட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தனித் தனியாக வெளியிடப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

சுமார் கி.மு. 187–ஆம் ஆண்டு மௌரியப் பேரரசு வீழ்ச்சியுற்றுச் சிற்றரசுகளாகச் சிதறுண்டது. எனவே, முத்திரை நாணயங்கள் வெளியிடப்பட்டது நிறுத்தப்பட்டதென்று கருதப்படுகிறது. இவ்வாறு கி.மு. 2–ஆம் நூற்றாண்டளவில் முத்திரை நாணயங்கள் அச்சிடுவது நிறுத்தப்பட்டாலும் மேலும் பல நூற்றாண்டுகள் அவை வழக்கில் இருந்தன.

## குஷானர் நாணயங்கள்

இந்திய வரலாற்றில் குஷான அரசு மரபினருக்குத் தனித்ததோர் இடமுண்டு. இவர்களது பேரரசு அயல்நாடுகளிலும் பரவியிருந்தது. தமது ஆட்சிக் காலத்தில் பல வகையான காசுகளை இவர்கள் வெளியிட்டுள்ளனர். இந்தியாவில் முதன்முறையாகத் தங்கக் காசுகளை வெளியிட்ட பெருமை இம் மரபின் வீமா காட்பீஸையே சாரும். வீமா காட்பீஸ் (கி.பி. முதலாம் நூற்றாண்டு) வெளியிட்ட காசுகளின் பின்புறம் சைவ சமயக் கடவுளான சிவபெருமானின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இவரது காசுகள் சிலவற்றில் காளையின் முன்பு சிவன் உருவம் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளது. இவரது தினாரா காசுகளில் சிவன் உருவம் தனியாகவும் இரு கைகளுடனும் காட்டப்பட்டுள்ளது.

இந்திய நாணயவியல் வரலாற்றில் முதன் முறையாக புத்தபிரானின் உருவத்தைத் தனது காசுகளில் பொறித்த கனிஷ்கர் கிரேக்க கடவுளரையும் சிவபெருமானையும் தாம் பொறித்த காசுகளில் இடம் பெறச் செய்துள்ளார். இவர் தனது முன்னோரைப் போலச் சிவன் உருவத்தைப் பொறித்ததுடன் அதில் "ஓஷோ ஷாகோனசாகோ" எனும் வாசகத்தினையும் இடம் பெறச் செய்துள்ளார். கனிஷ்கரோ தனது காசுகளில் ஸ்கந்தகுமாரன், விசாகன், உமாதேவி, சிவபெருமான் திருவுருவங்களைத் தீட்டியுள்ளார்.

அயல்நாட்டுக்காரர்களான குஷான மன்னர்கள் கிரேக்க மொழிக்கும், கிரேக்க கடவுளர்க்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ள போதிலும், இந்துக் கடவுளர்களைத் தமது காசுகளில் வெளியிட்டுள்ளனர்.

## சாதவாகனர் கால நாணயங்கள்

அசோகர் காலத்திற்கு பின் சாதவாகனர்கள் முழுச் சுதந்திரம் பெற்று கி.பி. 227 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தனர். இவர்கள் வெள்ளியத்தால் நாணயங்களை அச்சிட்டனர். மேலும், இவர்கள் வெள்ளி, செம்பு நாணயங்களையும் பயன்படுத்தினர். வெள்ளியும் செம்பும் கலந்த கலவை 'POTIN" என்று அழைக்கப்பட்டன.

நாணயத்தின் ஒரு புறம் யானை, குதிரை, சிங்கம் பொறிக்கப்பட்டும் மறுபுறம் உஜ்ஜையனியின் அடையாளமாகக் கூட்டல் குறியும் நுனியில் நான்கு வட்டங்களும் காணப்படுகின்றன.

## உருத்ரசேனர் கால நாணயங்கள் (கி.பி. 3 ஆம் நூற்றாண்டு)

இக் காலத்தில் வெள்ளி நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. அரசரின் மார்பளவு உருவம் ஒரு புறமும் புத்த ஸ்தூபி மறு புறமும் பொறிக்கப்பட்டுள்ளன.

## குப்தர் கால நாணயங்கள் (கி.பி. 300–கி.பி. 500 வரை)

இந்திய வரலாற்றில் குப்தர்களின் ஆட்சிக் காலம் ஒரு பொற் காலம். இவர்கள் அதிக அளவில் தங்கக் காசுகளை வெளியிட்டதாலும் இந்து சமய மறுமலர்ச்சிக்குப் பெருந் துணை புரிந்துள்ளதாலும் இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளனர். குப்த மன்னர்கள் தாம் வெளியிட்ட நாணயங்களில் கங்காதேவி, லட்சுமி, முருகன் முதலான தெய்வத் திருவுருவங்களையும் கருடன், மயில் முதலான இந்து சமயக் கடவுளர்களின் வாகனங்களையும் வெளியிடுவதில் பெருமை கொண்டனர்.

முதலாம் சந்திரகுப்தர் (கி.பி. 319–350) சிங்கத்தின் மீது அமர்ந்த பெண் தெய்வத்தையும் (பாரசக்தி) சமுத்திரகுப்தர் கி.பி. 350–370 யமுனா தெய்வத்தையும் தலையில் முடிசூடி தாமரை மலர்மீது நின்ற நிலையில் பெண் தெய்வத்தையும் (லட்சுமி) வெளியிட்டுள்ளனர். இவர்கள் செம்பு, வெள்ளி நாணயங்களையும் வெளியிட்டுள்ளனர்.

முதலாம் சந்திரகுப்தர் காலத்திய நாணயங்களில் "லிச்சாவியா" என்றும் சமுத்திரகுப்தர் காலத்திய நாணயங்களில் "பராக்கிரம" என்ற எழுத்துகளும் பொறிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் சந்திரகுப்தர் நாணயங்களில் "ஸ்ரீவிக்கிரமாதித்தன்" என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளன.

## ஹர்ஷவர்த்தனர் கால நாணயங்கள் (கி.பி. 606-648)

இவர் காலத்தில் வெள்ளி நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. அரசன் தலை உருவம் ஒரு புறமும் தோகையை விரித்த மயில் மறு புறமும் பொறிக்கப்பட்டுள்ளன.

## மேலைச் சாளுக்கியர் நாணயங்கள்

இவர்களுடைய நாணயத்தின் ஒரு புறம் கோவில் அல்லது சிங்கமும் மற்றும் பழங் கன்னட எழுத்துக்களும் பொறிக்கப்பட்டும் மற்றொரு புறம் எதுவும் பொறிக்கப்படாமலும் வெற்றிடமாக உள்ளது. இவர்கள் செம்பிலும், வெள்ளியிலும் நாணயங்களை வெளியிட்டனர்.

## கீழைச் சாளுக்கியர் நாணயங்கள்

நாணயத்தினுடைய ஒரு புறத்தின் மத்தியில் பன்றி உருவமும் வட்ட வடிவத்தில் வெளியிட்ட மன்னரின் பெயரும் பொறிக்கப்பட்டு, மற்றொருபுறம் எதுவும் இல்லாமல் வெறுமையாக உள்ளன.

## பல்லவர் நாணயங்கள்

பல்லவர்களின் முத்திரை (இலச்சினை) சிம்மமும் காளையும் எனப் பட்டயங்களிலும், கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன. பல்லவர்கள் காசுகள் பொன், வெள்ளி, செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களினால் ஆனவை. காசுகளின் முன்புறம் காளை, பின் புறம் ஸ்வஸ்திக், சக்கரம், வில், மீன், குடை, சங்கு, கலசம், நந்தி, விளக்கு, கப்பல் முதலிய குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

### காசுகளில் காணும் பெயர்கள்

ஸ்ரீநிதி, ஸ்ரீபரர், மானவரஸ்ரீ, ஸ்ரீராஜ, ஸ்ரீவிபு, ஸ்ரீலசஷித, ஸ்ரீசதா சித்ரா முதலிய பெயர்கள் பல்லவ கிரந்த எழுத்தில் முகப்பின் மீது இரிஷப வாகன சின்னத்தின் மேல் பொறிக்கப்பட்டுள்ளன.

### இலக்கியச் சான்றுகள்

காணம், மஞ்சாடி, கழஞ்சு, பொன், காசு, விடேல், விடுகு, துளைப்பொன் முதலிய சொற்கள் பல்லவர் கல்வெட்டுகளிலும், தேவாரத்திலும் பெரிய புராணத்திலும் காணப்படுகின்றன.

### காசுகளின் உலோகம்

ஈயம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களில் காசுகள் கிடைக்கின்றன.

### காசுகளின் முகப்பு

காசுகளின் முகப்பில் பல்லவர் முத்திரையான காளையின் உருவம் நின்ற கோலத்தில் காசுகளின் வலப் பக்கமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. காளையின் தோற்றம் கீழக்காணும் நான்கு வகைகளாக அமைகிறது.

1. காளை உருவம், புராணக் காசுகளில் காணப்படுவது போல் இலேசாக அழுந்திய நிலையில்;

2. காளை உருவம் வரைகோடுகளால் தீட்டப்பட்ட நிலையில்;

3. பல்லவர் இலச்சினையில் அமைந்துள்ள காளை மேற்கூறப்பட்ட பல்லவர் காசுகள் சிலவற்றில் நந்தி உருவத்தின்மேல் பல்லவ கிரந்த எழுத்துகளும் சிலவற்றில் விளக்கு, ஸ்ரீவத்சம், சங்கு அல்லது பிறை பொறிக்கப்பட்டுள்ளன.

4. புடைப்புத் தோற்றத்துடன் நின்ற நிலையில் காணப்படும் காளை.

### காசுகளின் பின்புறம்

காசுகளின் மறுபுறத்தில் அமைந்துள்ள குறியீடுகளைக் கொண்டு பல்லவர் காசுகளைப் பலவகைப்படுத்தலாம். காசுகளின் பின்புறம் காணப்படும் குறியீடுகள் (1) சுவஸ்திகா, (2) இரட்டை மீன், (3) ஸ்ரீவத்ஸம், (4) புலி, (5) சங்கு, (6) தாமரை, (7) கதிரவன், (8) ஆணைச்சக்கரம், (9) போதி மரம், (10) ஒற்றைக்குடை, (11) முக்குடை, (12) கும்பம், (13) சித்திர எழுத்துக்கள், (14) தோணி.

வெள்ளியிலும், செம்பினாலும் ஆன காசுகள் அனைத்தும் வட்ட வடிவமானவை. காசுகளின் நிறையை ஒட்டியும் குறுக்களவைப் பொறுத்தும் எட்டு வகைகளாகக் காசுகளைத் தரம் பிரிக்கலாம்.

### காசுகளின் நிறை

(1) 400 மில்லி கிராம், (2) 700 மில்லி கிராம், (3) 1 கிராம், (4) 1.5 கிராம், (5) 2.5 கிராம், (6) 3 கிராம், (7) 4 கிராம், (8) 8 கிராம். எனவே, பல்லவர் காலத்தில் எண் வகை நிறையுள்ள பொன், வெள்ளி, செம்பு, ஈயக் காசுகள் மக்கள் மத்தியில் செலவாணி ஆகியிருக்கலாம் எனத் தெரியவருகிறது.

### காசுகளின் குறுக்களவு

(1) 0.7 செ.மீ. (2) 1 செ.மீ. (3) 1.2 செ.மீ. (4) 1.5 செ.மீ. (5) 2 செ.மீ.

சாதவாகன மன்னர் ஸ்ரீபுலுமாயி வெளியிட்ட காசுகளைப் போல் எட்டு வகை மதிப்புள்ள காசுகளைப் பல்லவ மன்னர்கள் வெளியிட்டு இருக்கலாம். பல்லவர்களின் பொற்காசும், ஈயக் காசும் தற்போது கிடைப்பது அரிது.

### காசுகளில் காணப்படும் எழுத்துக்கள்

பல்லவ கிரந்த எழுத்தில் அமைந்துள்ள பல்லவ மன்னர்களின் பட்டப் பெயர்கள் 'ஸ்ரீபர', 'ஸ்ரீநிதி' எனப் பொறிக்கப்பட்ட காசுகள் இராசசிம்ம பல்லவனையும், 'மானபர' என்னும் பொறிப்பு தெள்ளாறு எறிந்த நந்திவர்மனையும், 'விபு' 'லஷித', 'கதாசித்ரா' என்னும் பொறிப்புகள்

முதலாம் மகேந்திரவர்மனையும் குறிப்பதாக நாணயவியலார் கூறுவர். கிரந்த எழுத்துகள் ஒரு சில காசுகளின் முகப்பில் காளைச் சின்னத்திற்கு மேல் பொறிக்கப்பட்டுள்ளன.

## ஜகதேகமல்லர் நாணயங்கள் (கி.பி. 1018–1042)

இந்நாணயத்தின் ஒரு பக்கத்தில் ஒன்பது முத்திரைகள் இடப்பட்டுள்ளன. இதில், மைய முத்திரையில் கோயில் கோபுரம் ஒன்றும் அதனைத் தாங்கி உள்ளவாறு அதனைச் சுற்றி விஷ்ணு சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளன. தூண்களுக்கு இடையில் "ஸ்ரீஜகதேகமல்லா" என்ற கன்னட எழுத்துக்களும் காணப்படுகின்றன. இந் நாணயத்தின் விளிம்புகளிலுள்ள எட்டு முத்திரைகளிலும் கன்னடத்தில் 'ஸ்ரீ' என்ற எழுத்தும் அரசரின் பெயரும் அடுத்தடுத்து பொறிக்கப்பட்டுள்ளன.

## பிருதிவிராஜ்–இராஜபுத்திரவம்சக் காசுகள் (கி.பி. 1175–1193)

இவர் காலத்தில் தங்கம், செம்பு நாணயங்கள் அதிகமாகவும் அரிதாக வெள்ளி நாணயங்களும் புழக்கத்திலிருந்தன நாணயங்களின் ஒரு புறத்தில் அரசரின் பெயர் சமஸ்கிருதத்திலும் மற்றொரு புறத்தில் அம்மன் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் வகை நாணயத்தில், குதிரை வீரன் ஒரு புறத்திலும் எருது மறு புறத்திலும் காணப்படுகின்றன. மற்றொரு வகை நாணயத்தில் 'ஸ்ரீபிருதிவிராஜ்தேவா' என்ற வாசகம் ஒரு புறத்திலும் 'அசவாரி', 'ஸ்ரீசாமந்ததேவா' என்ற வாசகங்கள் மற்றொரு புறத்திலும் காணப்படுகின்றன.

## பிற்காலச் சோழர் நாணயங்கள்

அன்றாடு, நற்காசு, பழங்காசு, அன்றாடு நற்பழங்காசு, மதுராந்தகன் மாடை, கருங்காசு, ஈழக்கருங்காசு என்றவாறு காசுகள் சோழர் காலத்தில் வழக்கில் இருந்ததைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. ஈழக் காசு என அழைக்கப்பட்ட சோழர் காலத்துக் காசுகளின் ஒரு புறத்தில் ஒரு

மனித உருவம் நின்று கொண்டிருப்பது போலவும் மறு பக்கத்தில் அதே உருவம் அமர்ந்திருப்பது போலவும் காண்பிக்கப்பட்டுள்ளன. இராசராச சோழன் காலத்தில் வெளியிடப்பட்ட இத்தகைய ஈழக் காசுகளில் 'ஸ்ரீராஜராஜ' என நாகரி எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

'கங்கை கொண்ட சோழன்', 'உத்தமசோழன்' என நாகரி, எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள், குலோத்துங்க சோழன் வெளியிட்ட தங்கக் காசுகள் ஆகியவை கிடைத்துள்ளன. எழுத்துப் பொறித்த காசுகளின் மறு புறம் புலி, இரட்டை மீன் முதலியன பொறிக்கப்பட்டுள்ளன.

**(அ) முதலாம் இராஜராஜன்**—இவரது நாணயங்கள் ஒரு புறத்தில் அரசர் நின்ற நிலையிலும் இடது கையில் தாமரையை பிடித்த வண்ணமும் வலது கையில் விளக்குத் தாங்கியுடனும் பிறை நிலவும் அதன் கீழே மீன் சின்னமும் நான்கு புள்ளிகளும் காணப்படுகின்றன. மறுபுறத்தில் அம்மனும் காணப்படுகிறது. இதில் 'ராஜராஜ' என்ற நாகரி வாசகம் காணப்படுகிறது. இவை செம்பு நாணயங்கள் ஆகும்.

**(ஆ) இராஜேந்திர சோழன்** (கி.பி. 1014–1044)—இவர் காலத்தில் வெள்ளி நாணயங்கள் புழக்கத்திலிருந்துள்ளன. இந் நாணயங்களின் ஒரு புறத்தில் புலியும், விளக்குத் தாங்கியும், இரண்டு மீன்களும் பொறிக்கப்பட்டுள்ளன. கங்கை கொண்ட சோழன் என்ற பெயர் சமஸ்கிருதத்தில் காணப்படுகின்றது.

## கொங்குச் சோழர் நாணயங்கள்

கொங்குச் சோழர் காலக் கல்வெட்டுகளில் கழஞ்சு, காணம், அச்சு, ஆனை அச்சு, சலங்கை, புதுச்சலங்கை, பழஞ்சலங்கை, ஸ்ரீயக்கி போன்ற காசு வகைகள் கூறப்படுகின்றன. பணம், வராகன் போன்ற காசுகள் கொங்குச் சோழர் ஆட்சியின் இறுதியில் புழக்கத்தில் வந்த காசுகள். இவற்றில் கழஞ்சு என்பது காணத்தை விடக் குறைவான எடை உள்ளது என்று நாகசாமி கூறுகிறார். கோவைக் கிழார் ஒரு கழஞ்சு என்பது எட்டு

வராகன் என்று கூறுகின்றார். கொங்குச் சோழர் தொடக்க காலக் கல்வெட்டுகளில் கழஞ்சு கூறப்பெறுகின்றது. பிற்காலத்தில் கழஞ்சின் பயன்பாடு குறைந்து விட்டது.

கொங்குச் சோழர் காலத்தில் அச்சு, ஆனை அச்சு, பழஞ்சலங்கை அச்சு, புதுச்சலங்கை அச்சு, இடைச்சலங்கை அச்சு என்று பலவகை அச்சு வகைக் காசுகள் கூறப்படுகின்றன. அதற்கு முன்பு, அச்சுகள் பற்றித் தகவல்கள் ஏதும் கூறப்படவில்லை. ஆகையால் வட, தென் கொங்குப் பகுதிகள் ஒரு குடையின்கீழ் வந்த பின், கேரளர்கள் ஆட்சியிலிருந்த தென்கொங்கில் புழக்கத்திலிருந்த "அச்சு" என்ற காசு வடகொங்கிலும் புழக்கத்திற்கு வந்தது எனலாம். காசுகளில் சலங்கை அச்சு, ஆனை அச்சு ஆகியவற்றிற்கிடையில் வேறுபாடு உண்டு. ஆனை அச்சு என்பது கங்கர்கள் வெளியிட்ட காசுகள் என்பர். மேலும், ஆனை அச்சு கங்கர்களால் கொங்கில் அறிமுகப்படுத்தப்பட்டுக் கேரளத்திற்குச் சென்றிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

தென் கொங்கில் ஆட்சி செய்த வீரகேரளர்கள் வெளியிட்ட வெள்ளிக் காசுகள் செங்கற்பட்டு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒரு புறம் 'வீரகேரளஸ்ய' என்றும் மறுபுறம் 'ஸ்ரீகண்டரெங்குச' என்றும் எழுதப்பட்டுள்ளன. வீரகேரளன் என்ற பெயர் கொண்ட அரசர்கள் கொங்கு நாட்டில் ஆட்சி செய்துள்ளனர். முதலாம் இராஜராஜன் கல்வெட்டில் (கி.பி. 1046) வீரகேரளன் கூறப்படுகிறான். இந்தக் காசில் குறிக்கப்படும் மன்னன் கொங்குச் சேர மன்னன் என்றும் அவன் களப்பிர மரபினைச் சேர்ந்தவன் என்றும் நாகசாமி கருதுகிறார். ஆனால், வீரகேரளன் என்ற பெயர் கேரளத்திலிருந்து வந்த சிற்றசர்களில் சிலரைக் குறிப்பது என்று கே.வி. சுப்ரமணிய அய்யர் கருதுகிறார். களப்பிரரது என்று கருதப்படும் கல்வெட்டு கி.பி. 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. ஆனால், வீரகேரளன் என்று கூறப்படும் மன்னன் கி.பி. 11–12 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவன் என்று கருதலாம். இந்தக் கால கட்டத்தைச் சேர்ந்தவன் 'செங்கற்பட்டு காசு' கூறும் வீரகேரளம் மரபினன். எனவே, அவை கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட காசுகள் எனலாம்.

ஸ்ரீயக்கி காசு சமண சமயத்தின் செல்வாக்கு நிலை பெற்றிருந்த கொங்கு நாட்டில் வெளியிடப்பட்ட காசுகள் ஆகலாம்.

அச்சு, கழஞ்சு ஆகியவை ஒரே மதிப்புடையன என்று கருதப்படுகின்றது. பொன்னால் செய்யப்பட்ட அச்சுக் காசுகள் சில கிடைத்துள்ளன. பொன்னாலாகிய கழஞ்சும் பொன்னால் ஆன அச்சும் ஒத்த மதிப்புடையவை என்று கருதுவதும் தவறில்லை. பணம், வாரகன், புள்ளிக் குகை போன்ற காசுகள் கல்வெட்டுகளில் கூறப்படுகின்றன. இவை கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த காசுகள்.

கொங்கு நாட்டில் கிடைக்கின்ற கோவில் கொடைகளில் சில அறுபது விழுக்காடுகளுக்கு மேல் காசுக் கொடைகளே, அது கொண்டு, கொங்கு நாட்டில் வணிகமும் வணிகம் சார்ந்த தொழில்களும் மிகுதியாகச் செய்யப்பட்டன என்று கருதலாம். வணிகத்தின்வழியாகக் கிடைத்த காசுகள் கொடையாக அளிக்கப்பட்ட, அவற்றின் வழி கிடைக்கும் வட்டியின் வாயிலாக அறம் செய்துள்ளனர். காசுகளுக்குரிய வட்டி அச்சுக்குப் பத்து சதம் எனக் கருதப்படுகின்றது.

கொங்கு சோழர்கள் தொடக்க நாட்களில் சோழ நாட்டில் வழக்கிலிருந்த 'கழஞ்சு' என்ற காசினை வட கொங்கில் பயன்படுத்தினர். ஆனால், பிற்காலங்களில் கழஞ்சுடன் அச்சு வர்க்கங்களின் பயன்பாடு மேலோங்கிக் கழஞ்சின் பயன்பாடு குறைந்துவிட்டது எனலாம்.

## பாண்டியர் நாணயங்கள்

**1. அவனிபசேகரன் (கி.பி. 9 ஆம் நூற்றாண்டு)**

| | | |
|---|---|---|
| முன் பக்கம் | – | குத்திட்டு நிற்கும் நிலையில் இரு கயல்கள். |
| பின் பக்கம் | – | 'ஸ்ரீ அவனிபசேகரன் கொளக' என்று மூன்று வரிகள் தமிழில். |
| உலோகம் | – | செம்பு. |

**2. இரண்டாம் வரகுணன் (கி.பி. 9–10 ஆம் நூற்றாண்டு)**

| | | |
|---|---|---|
| முன் பக்கம் | – | படுத்த நிலையில் இரு கயல்கள் |
| பின் பக்கம் | – | 'ஸ்ரீவரகுண' என்ற ஒரு வரி கிரந்த எழுத்துகள். |
| உலோகம் | – | 'தங்கம்' |

3. சுந்தரபாண்டியன் (கி.பி. 11–ஆம் நூற்றாண்டு)

| | | |
|---|---|---|
| முன் பக்கம் | – | 'சுந்தரபாண்டியன்' என்று இருவரிகள் தமிழ் எழுத்தில், கீழே இரு கயல்கள் இடையில் சாட்டை. |
| பின் பக்கம் | – | வலப் பக்கம் திரும்பிய பன்றி, மேலே சக்கரம், பிறைச் சந்திரன், சூரியன், சங்கு, |
| உலோகம் | – | செம்பு |
| முன்பக்கம் | – | பத்மாசனத்தில் அமர்ந்து அஞ்சலித்த நிலையில் உருவம். அதனிரு பக்கங்களிலும் கீழும் 'சுந்தரபாண்டியன்' என்று மூன்று வரிகள் தமிழில் உள்ளன. |
| பின் பக்கம் | – | இரு கயல் நடுவில் சாட்டை, மேலே கொற்றக்குடை மற்றும் சாமரங்கள். |
| உலோகம் | – | செம்பு |

4. வீரபாண்டியன் (கி.பி. 12–ஆம் நூற்றாண்டு)

| | | |
|---|---|---|
| முன் பக்கம் | – | நிற்கும் மனித உருவம், இடக் கரத்துக்குக் கீழ் மூன்று அல்லது அதற்கு மேலான மூன்று புள்ளிகள். |
| பின் பக்கம் | – | 'வீரபாண்டியன்' என்று தமிழ் எழுத்தில் கீழே இரு கயல், இடையில் சாட்டைகள் பக்கங்களில் விளக்கு. |
| உலோகம் | – | செம்பு |

5. மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி. 13–ஆம் நூற்றாண்டு)

| | | |
|---|---|---|
| முன் பக்கம் | – | 'சோணாடு கொண்டான்' என்ற மூன்று வரிகளில் தமிழ் பொறிப்பு. |

பின் பக்கம் – நிற்கும் மனித உருவம்

உலோகம் – செம்பு

**6. சுந்தரபாண்டியன் (கி.பி. 11–14–ஆம் நூற்றாண்டு)**

முன்பக்கம் – குத்திட்டு நிற்கும் இரு கயல்கள், சாட்டையின் நுனிப் பகுதி வலப் பக்கம் ஊர்ந்தும் அடிப் பகுதியில் கைப் பிடியோடும்.

**7. செயன் பாண்டியன்–** இப்பாண்டிய மன்னன் வெளியிட்ட நாணயங்களின் ஒரு புறத்தில் 'ஸ்ரீபாண்டய, 'தனஞ்ஜெ(ய)' என்ற நாகரி வாசகமும் மறு புறத்தில் மீன் உருவப் புள்ளிகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

## கேரள நாணயங்கள் (கி.பி. 1127)

இந் நாணயங்கள் வெள்ளியிலானவை. இந் நாணயத்தின் ஒரு புறத்தில் என்ற ஸ்ரீ கண்டராங் குசஸ்ய சமஸ்கிருத வாசகங்களும் இந்த இரண்டு வாசகங்களுக்கு இடையில் கும்பம் அல்லது பானை பொறிக்கப்பட்டுள்ளது. நாணயத்தின் மறு புறத்தில் 'ஸ்ரீவீர கேரளஸ்யா' என்ற சமஸ்கிருத வாசகமும் இச்சொற்களுக்கிடையில் மகரம் அல்லது முதலை (வாய் திறந்த நிலையில்) பொறிக்கப்பட்டுள்ளது.

## டெல்லி சுல்தான் நாணயங்கள்

**அலாவுதீன் முகமது ஷா கில்ஜி (கி.பி. 1296–1316)–** இவரது நாணயங்கள் சிலவற்றில் 'இரண்டாம் அலெக்சாண்டர்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இவர் காலத்தில் தங்க நாணயங்கள் பெருமளவில் வெளியிடப்பட்டன. இவரது நாணயங்களில் காலமும் பொறிக்கப்பட்டுள்ளது.

## ஷெர்ஷா நாணயங்கள்

இவரது நாணயங்களின் இரண்டு பக்கங்களிலும் பாரசீக எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நாணயத்தின் ஒரு பக்கத்தில் 'கலிமா' என்றும் மறுபக்கத்தில் சுல்தானின் பெயரும் 'ஹிஜ்ரி வருடமும்' பொறிக்கப்பட்டுள்ளன.

## முகலாயர் நாணயங்கள்

**அக்பர் (கி.பி. 1556–1605)** – இவர் வெளியிட்ட நாணயங்களின் ஒரு பக்கத்தில் கலிமா மற்றும் முகமது நபியின் நான்கு தோழர்களின் பெயர்களும் மறு பக்கத்தில் அக்பரின் இயற்பெயரான ஜாலாலுதின் முகமது மற்றும் **976** என்று ஹிஜ்ரி வருடமும் பொறிக்கப்பட்டுள்ளன.

**ஜஹாங்கீர் (கி.பி. 1605–1627)** – இவர் வெளியிட்ட சில நாணயங்களில் இராணி நூர்ஜஹான் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. இராசிகளிலுள்ள உருவங்கள் இவரது நாணயங்களில் காணப்படும் தடித்த திமிலுடைய காளையும் இதனைச் சுற்றிச் சூரியக் கதிர்கள் நாணயத்தின் ஒரு பக்கத்திலும் பாரசீக எழுத்துக்கள் மறு பக்கத்திலும் காணப்படுகின்றன. ஹிஜ்ரி வருடங்களில் ஆட்சி புரிந்த வருடங்கள் நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

## வாணாதிராயர் நாணயங்கள்

| | | |
|---|---|---|
| 1. முன் பக்கம் | – | இரு கயல்கள் நடுவில் செண்டு. |
| பின் பக்கம் | – | கருட மனித உருவம் கால்களை மடித்துப் பறக்கும் நிலையில், சங்கு சக்கரம். |
| 2. முன் பக்கம் | – | கருட மனித உருவம் இடப் பக்கம் திரும்பிய நிலையில் கால்களை மடித்துப் பறக்கும் நிலையில் இறக்கை காணப்படுகிறது. தலையின் இரு புறங்களிலும் சங்கு மற்றும் சக்கரம். |
| பின் பக்கம் | – | 'சமர கோலா கலன்' |

| | | |
|---|---|---|
| 3. முன் பக்கம் | – | கருட மனித உருவம் மீன் மீது அமர்ந்து, வலப்பக்கம் திரும்பிய நிலையில் கால்களை மடித்துப் பறக்கும் நிலை. இறக்கை காணப்படவில்லை. |
| பின் பக்கம் | – | 'கோலா கலன்' |
| 4. முன் பக்கம் | – | இரு கயல்கள் படுத்த நிலையில் நடுவில் செண்டு. |
| பின் பக்கம் | – | 'சமர கோலா கலன்' |
| 5. முன் பக்கம் | – | கருட மனித உருவம் கால்களை மடித்துப் பறக்கும் நிலை, இடக் கையில் பாம்பு, சங்கு, சக்கரம் மற்றும் கொற்றக் குடை. |
| பின் பக்கம் | – | 'புவ, னேக, வீரன்' என்று மூன்று வரிகள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. |
| 6. முன் பக்கம் | – | படுத்த நிலையில் இரு கயல்கள் நடுவில் செண்டு (சாட்டை) |
| பின் பக்கம் | – | ஐந்தாம் வகை காசுகளில் உள்ளவாறே. |

## விஜயநகர நாணயங்கள்

விஜயநகர நாணயங்கள் 'வராகன்கள்', 'பகோடாக்கள்' என அழைக்கப்பட்டன. முத்திரை குத்தப்பட்ட நாணயங்களுக்குப் பதிலாக அச்சிடப் பொறிகள் பயன்படுத்தப்பட்டன. இவை 56 தானிய எடை கொண்டிருந்தன.

விஜயநகர அரசர்கள் தம்முடைய நாணயத்தில் ஒரு புறத்தில் காளை, சரஸ்வதியுடன் பிரம்மா, உமாமகேசுவரர் உருவங்கள் பொறித்த நாணயத்தினை வெளியிட்டனர். நாணயத்தின் பின்புறம் நாகரி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. செம்பு, வெள்ளி,

தங்கம் ஆகிய உலோகங்களில் நாணயங்களை வெளியிட்டனர். மேலும் அனுமன் உருவம் பொறித்த நாணயங்களும் அதிக எண்ணிக்கையில் வெளியிடப்பட்டன.

இரண்டாம் தேவராயர் காலத்திய செம்பு நாணயங்களில் யானைகள் சண்டையிடும் காட்சி பொறிக்கப்பட்டு உள்ளது.

துளுவ வம்சத்தைச் சேர்ந்த கிருஷ்ண தேவராயர் தங்கத்திலும், செம்பிலும் நாணயங்களை வெளியிட்டார். சென்னை அரசு அருங்காட்சியகத்தின் சேகரிப்பில் கிருஷ்ண தேவராயர் காலத்தில் வெளியிட்ட செம்பு, தங்க நாணயங்கள் உள்ளன. இவர் வெளியிட்ட நாணயங்களில் ஒரு பக்கத்தில் அமர்ந்த நிலையில் விஷ்ணு உருவமும் மறு பக்கத்தில் ' ஸ்ரீபிரதாபா கிருஷ்ணராய (ர்)' என்ற மூன்று வரிகளாகச் சமஸ்கிருத எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இந் நாணயங்களில் (1) வெங்கடேசர், (2) சிவபார்வதி, (3) பாலகிருஷ்ணர், (4) காளை, (5) கருடன் உருவங்கள் பொறித்த நாணயங்களும் அடங்கும்.

அச்சுதராயர் என்ற மன்னர் ' கண்ட பேருண்டா' உருவம் பொறித்த செம்பு, தங்கக் காசுகளை வெளியிட்டார்.

அரவிடு வம்சத்தைச் சேர்ந்த திருமலைராயர் என்ற மன்னர் ஸ்ரீராமர், சங்கு, சக்கரம், கருடன், பன்றி, யானை, எருது, அமர்ந்த நிலையில் விஷ்ணுவுடன் லட்சுமி உள்ளிட்ட உருவப் பொறிப்புடைய நாணயங்களை வெளியிட்டார்.

விஜயநகர மன்னர்கள் வெளியிட்ட பகோடா நாணயங்கள் கி.பி. 1835 வரை புழக்கத்தில் இருந்தன. இவர்களுடைய நாணயத்தின் பின்புறம் கன்னட மொழி அல்லது சமஸ்கிருத, தெலுங்கு எழுத்துக்கள் இருந்தன.

விஜயநகர அரசு மரபினரின் அனைத்து நாணயங்களும் ஆந்திர மாநில அரசின் பராமரிப்பில் உள்ள அருங்காட்சியகச் சேகரிப்பில் உள்ளது.

# நாயக்கர் கால நாணயங்கள் (கி.பி.1529-1736)

நாட்டின் பொருளாதார வளர்ச்சியினைக் காட்டும் ஓர் அளவு கோலாக நாணயங்கள் விளங்குகின்றன. மன்னர்கள் தம் வெற்றியின் போதும் பதவியேற்கும்போதும் இன்ன பிற முக்கிய நிகழ்ச்சிகளின் போதும் நாணயங்களை வெளியிட்டனர். ஒவ்வொரு பேரரசு காலத்திலும் வெவ்வேறு வகையான நாணயங்கள் வெளியிடப்பட்டன.

நாயக்கர்கள் விஜயநகரப் பேரரசின் காலத்திற்குப் பின் அரியணை ஏறியவர்கள். கிருஷ்ண தேவராயர் காலத்தில் நியமிக்கப்பட்ட பாளையக்காரர்கள் தன்னுரிமை பெற்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தனர்.

நாயக்கர் காலத்தில் செம்பில் மட்டுமே நாணயங்கள் வெளியிடப்பட்டன. தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களில் நாணயங்கள் வெளியிடப்படவில்லை.

**விசுவநாத நாயக்கர் கால நாணயங்கள்**

இவர் காசின் முன் பக்கம் நிற்கும் மனித உருவமும் பின் பக்கம் இருகயல்கள் இடையில் சாட்டை, பிறைச் சந்திரன் மற்றும் இடப் பக்கமிருந்து வலப் பக்கமாகத் தமிழில் 'விசுவநாதன்'' என எழுதப்பட்டு காணப்படுகின்றது.

தமிழகத்தில் சிறுவடிவிலான செம்புக் காசுகள் பெரும் அளவில் கிடைத்து வருகின்றன. இவற்றில் ஒரு எழுத்து அல்லது ஈரெழுத்துக்களோ காணப்படுகின்றன. இவ் வெழுத்துக்களைக் கொண்டு மதுரை நாயக்க மன்னர் சிலரால் இக் காசுகள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்ற கருத்து கொள்ளப்படுகின்றது.

"வி" என்ற நாகரி எழுத்தில் எழுதப்பட்டிருக்கும் காசு வீரப்ப நாயக்கரையும் "சொ" என்ற தெலுங்கு, கன்னட எழுத்தில் எழுதப்பட்டுக் காணப்படுவது சொக்கநாத நாயக்கரால் வெளியிடப்பட்டது என்றும் "தி" என்று எழுதப்பட்டிருப்பது திருமலை நாயக்கரால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் ஊகிக்கப்படுகின்றன.

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் பாண்டியர்களைக் காட்டிலும் மிகச் சிறிய வடிவில் செம்பாலான காசுகளை வெளியிட்டுள்ளனர். அவற்றில் "விழு", "சொ", "தி" போன்ற தங்களது பெயரின் முதல் எழுத்தினையும் காளை, கந்தன், சந்திரன், சூரியன், கத்தி, விநாயகர், சங்கு, தேவி முதலிய உருவங்களையும் பொறித்து வெளியிட்டுள்ளனர்.

இவற்றுள் திருமலை நாயக்கர் வெளியிட்டது என்று கருதப் படும் காசின் ஒருபுறம் கத்திக்கு முன்பாக நிற்கும் காளையின் உருவமும் மதியின் உருவமும் காணப்படுகின்றன. மற்றொரு புறம், நிற்கும் நிலையிலுள்ள உருவம் ஒன்று காணப்படுகிறது. இவ் வுருவத்திற்கு அருகில் "தி" என்று தெலுங்கில் எழுத்து ஒரு புறமும் மற்றொரு புறம் மீனாட்சியின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ள செப்புக் காசுகள் மதுரைப் பகுதியில் நிறையக் கிடைத்துள்ளன.

இராணி மங்கம்மா நாணயத்தின் முன் பக்கத்தில் மேடை மீது படுத்திருக்கும் காளை உருவமும் பின் பக்கம் நான்கு சதுரங்களில் 'மங்கம்மா' என்ற தெலுங்கு எழுத்துகளும் பொறிக்கப்பட்டுள்ளன. இது, மதுரையை ஆட்சி புரிந்த இராணி மங்கம்மாவால் வெளியிடப்பட்டது என்று தெரிய வருகிறது.

இரண்டு செம்புக் காசுகள் கிடைத்துள்ளன. முதல் வகைக் காசில் சரஸ்வதி வீணையுடன் அமர்ந்திருக்கும் காட்சி அழகாக உள்ளது. பின் பக்கத்தில் 'மங்கம்மா' எனத் தெலுங்கு எழுத்துகளும் உள்ளன. காசின் எடை 2.1 கிராம்.

இரண்டாம் வகை காசின் முன் பக்கத்தில் அன்னப் பறவையுடன் சரஸ்வதி வீணையுடன் இருக்கும் காட்சி உள்ளது. காசின் பின் பக்கத்தில் 'மங்கம்மா' என்று தெலுங்கு எழுத்துகளில் உள்ளது. இதன் எடை 1.8 கிராம்.

செஞ்சிப் பகுதியை ஆட்சி புரிந்த நாயக்க மன்னர் (கிருஷ்ணப்ப நாயக்கர்) கி.பி. (1567–1575). இவர் வெளியிட்ட நாணயங்களில் 'கிருஷ்ணப்ப நாயக்கர்' என்று நான்கு வரிகளில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இக் காசின் முக்கியத்துவம் யாதெனில் 'நாயக்கர்' என்று தம் குலப் பெயரையும் எழுதி வெளியிட்டிருப்பதாகும்.

தஞ்சைப் பகுதியை ஆண்ட செவப்ப நாயக்கர் நாணயத்தின் முன் பக்கம் புள்ளிகளாலான வட்டத்தில் சங்கின் உருவமும் பின் பக்கம் இரு வரிகளில் நாகரி எழுத்தில் 'சவப்பா' என்று எழுதப்பட்டும் காணப்படுகிறது.

### இரகுநாத நாயக்கன் (கி.பி. 1600–1634)

இவர் செம்புக் காசுகளை வெளியிட்டார். மன்னரின் பெயர் நாகரி எழுத்தில் 'ரகுநாத' என்று இரு வரிகளில் எழுதப்பட்டு உள்ளது. மற்றொரு காசில், 'விஜய ரகுநாதன்' எனத் தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் முன் பக்கத்தில் இராமர், இலக்குவணன், சீதை, அனுமன் நிற்கும் நிலையிலும் பின்பக்கம் இடையில் நீண்ட வாளினைச் செருகிக்கொண்டு நிற்கும் உருவத்தினையும் பொறித்து வெளியிட்டுள்ளனர்.

தஞ்சை செவ்வப்ப நாயக்கர் மற்றும் இரகுநாதர் காலத்து நாணயங்களில் சங்கு உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

சதாசிவ நாயக்கர் சிவன்–பார்வதி உருவம் தாங்கிய அழகிய தங்க நாணயங்களைக் கர்நாடகத்தில் வெளியிட்டார். சிவன் திரிசூலதத்துடன் வேகமாகப் பாயும் மானை ஏந்தியபடி காணப்படுகிறார்.

பாண்டிய நாட்டின் சின்னமான மீன் உருவம் பொறிக்கப்பட்ட சில வகை நாணயங்களை மதுரை நாயக்கர்கள் வெளியிட்டார்கள். ஆரம்ப கால நாயக்கர்கள் மன்னர் உருவத்தினையும் நந்தி உருவத்தினையும் பொறித்து வெளியிட்டனர். மதுரை நாயக்கர்களில் கடைசி மன்னரான சொக்கநாதர் விலங்கு உருவங்கள் மற்றும் அனுமன் உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டார்.

## மைசூர் சுல்தான் நாணயங்கள்

### ஹைதர் அலி

இவர் வெளியிட்ட நாணயங்களின் ஒரு பக்கத்தில் மைசூர் இந்து உடையார் அரசர்களின் சின்னமாகிய சிவன் மற்றும் பார்வதி உருவங்களும், சிவன் உருவம் திரிசூலத்துடனும், பார்வதி உருவம் மானுடனும் பொறிக்கப்பட்டுள்ளன. நாணயத்தின் மறு பக்கத்தில் பாரசீக

மொழியில் ஹைதர் அலியின் முதல் எழுத்து மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

**திப்பு சுல்தான் (கி.பி. 1782–1799)**

நாணயங்களின் ஒரு பக்கத்தில் துதிக்கையைத் தூக்கிய நிலையில் யானையும் அதன் பின் புறம் நட்சத்திரம் தாங்கிய கொடியும் ஹிஜ்ரி வருடமும் மறு பக்கத்தில் "ஓர் உஸ்மானி" (இரண்டு பைசா) என்று பாரசீக மொழியிலும் அச்சிடப்பட்டுள்ளன.

## மைசூர் உடையார் நாணயங்கள்

கிருஷ்ணராஜ உடையார் (கி.பி. 1799–1869) – வெளியிட்ட நாணயத்தின் ஒரு பக்கத்தில் சிவனும் பார்வதியும் மறு பக்கத்தில் 'ஸ்ரீகிருஷ்ணராஜா' என்ற மூன்று வரிசைகளில் சமஸ்கிருதச் சொற்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

## ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி நாணயங்கள்

**மூன்று சாமி பகோடா**–இந் நாணயத்தின் ஒரு பக்கத்தில் திருப்பதியில் உள்ளதுபோல் வெங்கடேஸ்வரருடன் அவரது தேவியர் இருவரின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. மறு பக்கம் வெற்றிடமாக உள்ளது.

**ஒரு மொஹர்** – இந் நாணயத்தின் ஒரு பக்கத்தில் 'ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி' என்று ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. மறு பக்கத்தில் 'மேதகு கிழக்கிந்திய கம்பெனி அஷ்ரபி' என்ற பாரசீக எழுத்துக்களும் காணப்படுகின்றன.

**நட்சத்திர பகோடா** – இந் நாணயத்தின் ஒரு பக்கத்தில் கோவில் கோபுரமும் அதனைச் சுற்றி 18 நட்சத்திரங்களும் ஓரத்தில் 'அரை பகோடா' என்ற ஆங்கிலச் சொற்களும் பாரசீக சொற்களும் பொறிக்கப்பட்டுள்ளன. நாணயத்தின் மறு பக்கத்தில் விஷ்ணுவும்

அதனைச் சுற்றி புள்ளிகளும் நட்சத்திரமும் "அரை பகோடா' என்ற வாசகம் தமிழ், ஆங்கிலம் மற்றும் தெலுங்கு எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

## அம்மன் காசு

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் 'அம்மன் காசு' எனப்படும் சிறிய காசு செலவாணியில் இருந்தது. அம்மன் காசு இங்கு நடைபெற்ற தசரா பண்டிகையோடு தொடர்புடையதாகும். தசரா பண்டிகையின்போது ஏழை பிராமணர்களுக்கு அளிக்கும் பொருட்டு இந்த காசு கி.பி. 1738–ஆம் ஆண்டு வாக்கில் அச்சடிக்கப்பட்டது. இக்காசு விற்பனை ரகுநாததொண்டைமான் காலத்தில் வெளியிடப்பட்டது. பின்பு சமஸ்தானத்தின் நடைமுறை செலவாணிக்கு இது வந்தது.

அம்மன் காசின் ஒரு பக்கத்தில் தொண்டைமான் மன்னர்களின் குல தெய்வமான பிரகதாம்பாள் அம்மனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளதால் இப் பெயர் ஏற்பட்டது. காசின் மறு பக்கத்தில் 'விஜய' என்று தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளது. அம்மன் காசு புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கி.பி. 1948–ஆம் ஆண்டு வரை செலவாணியில் இருந்து வந்தது. தொடக்கத்தில் இக் காசுகள் கையினாலேயே புதுக்கோட்டையில் தயாரிக்கப்பட்டன.

## மராட்டியர் கால காசுகள்

சக்கரம் என்னும் காசும் அதன் கூறுகளான பணம், காசு ஆகியவைகளும் பெரும்பாலும் புழக்கத்தில் இருந்தன. 'சென்னப் பட்டணம் வெள்ளிப் பணம்' என்று ஒரு வகைக் காசும் வழக்கில் இருந்திருக்கிறது. புலிவராகன் என்ற மற்றொரு வகைக் காசும் பேசப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு, காசுகளின் மதிப்பைக் கீழ்வருமாறு உணரலாம்.

| | | |
|---|---|---|
| 32 காசு | – | ஒரு பணம் |
| 2½ பணம் | – | சென்னப் பட்டணம் வெள்ளிப் பணம் |
| 4 வெள்ளிப் பணம் | – | 1 சக்கரம். |

(அ) 10 பணம்

4½ சக்கரம் – 1 புலிவராகன்

(அ) 45 பணம்

4½ சக்கரம் அல்லது 45 பணம் மதிப்புடைய புலிவராகன் இருந்ததைப் போன்றே 2¼ சக்கரம் அல்லது 22½ பணம் மதிப்புடைய மற்றொரு புலிவராகனும் கையாளப்பட்டிருக்கிறது. இவ் வராகன் வெள்ளிப் புலிவராகன் என்று குறிக்கப்படுகிறது. ஆதலால், 4½ சக்கர மதிப்புடைய புலிவராகன் என்று தங்கக் காசாக இருந்திருக்கலாம்.

மராட்டியர் ஆட்சிக் காலத்தில் காசுகளை அச்சடிக்கும் தங்க சாலை "திருமருகல்", என்னும் ஊரில் இருந்துள்ளது.

மேலும், ஒரு வராகனுக்கு சக்கரம் 2, பணம் 8 என்ற மதிப்புடைய 'பரங்கிப் பேட்டை வராகன்' என்னும் காசு ஒரு வராகனுக்குச் சக்கரம் 2, பணம் 8, என்ற ¾ மதிப்புடைய நாகப்பட்டினம் காசும் புழக்கத்தில் இருந்திருக்கின்றன.

மதுரை பகுதியில் வழக்கில் இருந்த 'சக்கரம்' என்ற காசு வகையானது தஞ்சைப் பகுதி 'சக்கரம்' என்ற காசு வகை மதிப்பை விடக் குறைவாக இருந்திருக்கிறது.

## சிவகங்கைச் சீமையின் சீரிய தமிழ்க் காசு

சசிவர்ணத்தேவர் காலத்தில் வெளியிட்ட ஒரு தாமிரப் பட்டயத்தின்மூலம் அக்கசாலை (நாணயச் சாலை) செயல்பட்டதைப் பற்றி அறிய முடிகிறது. அந்த அக்க சாலையில் எவ்வித நாணயம் வெளியிடப்பட்டது என்று அறிந்துகொள்ளச் சான்றாகச் சிவகங்கையில் இரண்டு செம்புச் காசுகள் கிடைத்துள்ளன. இந்தக் காசுகள் சிவகங்கைச் சீமைக்கு சசிவர்ணத் தேவர் மன்னரானவுடன் புழக்கத்திற்காக வெளியிட்டிருக்கலாம். இச் செம்புக் காசின் முன் பக்கத்தில் ஒரு சிவலிங்கம் காணப்படுகிறது. இலிங்கத்திற்கு அழகு ஊட்ட இதன் மேல் பகுதியில் ஒரு தொடர் மாலை போடப்பட்டுள்ளது. பின் பக்கத்தில் தமிழில் 'சசிவரஸை' என்று மூன்று வரிகளில் எழுதப்பட்டுள்ளது. சிவலிங்கம் காணப்படுவதால் மன்னர் சிறந்த சிவ

பக்தராக இருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. சிவகங்கைச் சீமையைத் தோற்றுவித்தவர் சசிவரணத் தேவரே ஆவார். இந்த காசிலிருந்து மன்னர் பெயர், சமயம், வணங்கிய தெய்வம், தமிழ் எழுத்தின் வளர்ச்சி ஆகிய பல அரிய செய்திகளை அறிந்துகொள்ள முடிகிறது.

## பூதலவீரக் காசுகள்

பூதலவீரக் காசுகள் அம்பைப் பகுதியில் கிடைத்துள்ளன. இக் காசுகள் யாவும் செம்புக் காசுகள். வட்ட வடிவமானவை, மூன்று கிராம் எடையுள்ளவை. இக் காசுகளில் உள்ள எழுத்துக்கள் கி.பி. 16—ஆம் நூற்றாண்டு எழுத்துக்கள் போன்று உள்ளன. இதுவரை பூதலவீர மன்னனின் ஐந்து வகையான காசுகள் கிடைத்துள்ளன.

## திருவிதாங்கூர் நாணயங்கள்

திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் நாணயங்களில் பொறித்துள்ள ஆண்டுகள் எல்லாம் கொல்லம் ஆண்டாக உள்ளதால் நாணயத்தில் பொறித்துள்ள ஆண்டுடன் 825—ஐக் கூட்ட வேண்டும்.

நாணயத்தில் 1115 என்று குறிப்பிடப்பட்டு இருந்தால், அதன் காலம் 1115+825= கி.பி. 1940

திருவிதாங்கூர் நாணயங்களின் வரிசை

| | | | |
|---|---|---|---|
| 1. | 16 காசு | — | சக்கரம் |
| 2 | 4 சக்கரம் | — | 1 பணம் |
| 3 | 2 பணம் | — | 1 அனந்தராய |
| 4 | 52½ பணம் | — | 1 பக்கோடா |

திருவிதாங்கூர் சமஸ்தானத்தைப் பல்வேறு மன்னர்கள் ஆண்டு வந்தபோதிலும் கி.பி. 1798 முதல் கி.பி. 1810 வரை ஆட்சிபுரிந்த முதலாம் பலராமவர்மா என்ற மன்னர் காலத்திய நாணயங்களும் அதற்குப் பின்னர் வந்த மன்னர்களின் நாணயங்களும்தாம் தற்போது கிடைத்துள்ளன.

முதலாம் பாலராமவர்மா என்ற மன்னர் ½ சக்கரம், 1 சக்கரம், 2 சக்கரம், ½ அனந்தராய, அனந்தராய ஆகிய மதிப்பினைக் கொண்ட நாணயங்களை வெளியிடப்பட்டுள்ளார். இவற்றின் சக்கரம் செம்பிலும், வெள்ளியிலும் வெளியிடப்பட்டுள்ளன. இரண்டு சக்கரம் நாணயங்களை வெள்ளியிலும் ½ அனந்தராய நாணயங்களைத் தங்கத்திலும் வெளியிட்டுள்ளார்.

### இராணி பார்வதி பாய் (கி.பி. 1815–1829)

இவருடைய காலத்தில் முறையாக காசு, 2 காசு, 4 காசு, 8 காசு ஆகிய செம்பு நாணயங்களை மட்டுமே வெளியிட்டுள்ளார். இவர் வெளியிட்ட நாணயத்தின் ஒருபுறம் எண்ணும் மறுபுறத்தில் Ψ போன்ற சின்னங்களும் உள்ளன. இவர் வெளியிட்ட நாணயங்களில் தமிழ் எழுத்துக்களைப் பொறித்துள்ளார்.

### மூன்றாம் இராமவர்மா (கி.பி. 1829–1847)

இவருடைய காலத்தில் காசு என்ற செம்பு நாணயத்தை மட்டும் இரண்டு வகைகளாக வெளியிட்டுள்ளார். இந்த நாணயங்களின் ஒன்றில் முன்புறம் சங்கு சின்னமும் மறு புறத்தில் பெண் தெய்வமானது தனது இரண்டு கைகளையும் பக்கவாட்டில் மேலே உயர்த்திய நிலையில் அமர்ந்துள்ளதும் காட்டப்பட்டுள்ளன.

### இரண்டாம் மார்த்தாண்டவர்மா (கி.பி. 1847–1860)

இவர் காசு, 2 காசு, 4 காசு மற்றும் 8 காசு ஆகிய செம்பு நாணயங்களை மட்டுமே வெளியிட்டுள்ளார். இவருடைய நாணயங்களின் ஒரு புறத்தில் வட்டத்தினுள் ஆறு முறை நட்சத்திர சின்னத்தைப் பொறித்துள்ளார். வட்டத்தைச் சுற்றிலும் சில வேலைப்பாடுகள் அமைந்துள்ளன.

### நான்காம் இராமவர்மா (கி.பி. 1860–1880)

இவர் ஆட்சி செய்த காலத்தில் மீண்டும் செம்பு நாணயங்களோடு வெள்ளி மற்றும் தங்க நாணயங்களையும் வெளியிட்டுள்ளார். இயந்திரத்தில் அச்சிட்ட தங்க நாணயங்களான பக்கோடா, இரண்டு

பக்கோடா ஆகியவற்றில் முன்புறத்தில் Ψ உருவமும் நாணயத்தின் மறுபக்கத்தில் மலர் வளையத்தினுள் சங்கும் உள்ளன. அனந்தராய என்னும் தங்க நாணயத்தைக் கை அச்சினால் தயாரித்து வெளியிட்டுள்ளார்.

## ஐந்தாம் இராமவர்மா (கி.பி. 1880–1885)

இவர் வெளியிட்ட வீரராய பணம் வெள்ளியிலும், தங்கத்திலும் உள்ளன. மற்றும் 1/2 சவரன், சவரன் ஆகிய தங்க நாணயங்களின் முன்புறம் மன்னரின் மார்பளவு உருவமும் அதைச் சுற்றி 'ஸ்ரீ ராமவர்மா மகாராஜா திருவிதாங்கூர்' என்ற வாசகமும் மன்னரின் உருவத்திற்குக் கீழே கொல்லம் ஆண்டையும் பொறித்துள்ளார். நாணயத்தின் மறு பக்கத்தில் இரண்டு யானைகள் சங்குச் சின்னத்தை வாழ்த்துவது போன்று துதிக்கையை உயர்த்தியுள்ளன.

## ஆறாம் இராமவர்மா (கி.பி. 1885–1924)

இவர் முறையாக 1/4 சக்கரம், 1/2 சக்கரம் என்னும் மதிப்புள்ள நாணயங்களைச் செம்பிலும் களிப்பணம் மட்டும் தங்கத்திலும் கை அச்சினால் தயாரித்து வெளியிட்டுள்ளார். பின்பு இயந்திரத்தில் அச்சடிக்கப்பட்ட செம்பு நாணயங்களில் ஒரு புறம் 1 காசு, 4 காசு, 8 காசு ஒரு சக்கரம், என்று ஆங்கில வாசகங்களிலும் நாணயத்தில் புள்ளி வட்டத்தின் நடுவில் ஒன்றின்மேல் ஒன்றாகவும் அச்சடித்து வெளியிட்டுள்ளார். மறு புறத்தில் மலர் வளையத்தினுள் சங்குச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இவர் வெளியிட்ட இரண்டு சக்கர வெள்ளி நாணயம் சிறிய அளவில் உள்ளது. பணம் ஒன்று என்ற வெள்ளி நாணயமும் மற்றும் ¼ ரூபாய், ½ ரூபாய் ஆகிய மதிப்புள்ள வெள்ளி நாணயங்களையும் இவர் வெளியிட்டுள்ளார்.

## இரண்டாம் பாலராமவர்மா (கி.பி. 1924–1947)

இவருடைய காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் எல்லாமே இயந்திரத்தில் அச்சடிக்கப்பட்ட நாணயங்கள். இவர் காசு, 4 காசு, 8 காசுகள், சக்கரம் என்னும் மதிப்புள்ள நாணயங்களைச் செம்பிலும் பணம் ¼ ரூபாய், ½ ரூபாய், ½ சித்ரா ரூபாய் என்ற நாணயங்களை வெள்ளியிலும் வெளியிட்டுள்ளார். இவர் வெளியிட்ட சக்கரம் என்ற

நாணயத்தில் ஒரு புறத்தில் மன்னரின் மார்பளவு உருவத்தை வலது பக்கம் பார்த்தவாறு பொறித்துள்ளார். இவ் வகை நாணயங்கள் சிலவற்றில் கொல்லம் ஆண்டாகிய 1114—ஐ பொறித்துள்ளார். இவர் வெளியிட்ட ½ சித்ரா ரூபாய் நாணயத்தில் ஒரு புறம் '1/2 சித்ரா ரூபாய்' என்ற வாசகம் ஆங்கிலத்திலும் கீழே கொல்லம் ஆண்டும் பொறிக்கப்பட்டுள்ளன. மறு பக்கம் மலர் வளையத்தினுள் சங்கு சின்னம் உள்ளது. (ME:- MALABAR ERA, கொல்லம் ஆண்டு)

## பழங்குடிகளின் நாணயங்கள்

வட இந்தியாவில் தற்போதுள்ள பஞ்சாப், அரியானா, இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்ட நாணயங்கள் கிடைத்துள்ளன. அக் காலத்தில் வாழ்ந்த பழங்குடி மன்னர்களால் வெளியிடப்பட்ட அவற்றை இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர்கள் ஆய்வு செய்தனர். அவர்கள் அவற்றிற்கு பழங்குடிகளின் நாணயங்கள் (TRIBAL COINS) எனப் பெயரிட்டனர்.

### அ. அகாரா நாணயங்கள்

அகாரா நாணயங்கள் — பஞ்சாப் மாநிலத்தில் அக்ரேய என்ற பகுதியில் வாழ்ந்த பழங்குடி மன்னர்களால் வெளியிடப்பட்ட இவை வட்ட வடிவிலுள்ள செம்பு நாணயங்கள் முன் புறத்தில், வேலியிட்ட மரமும் அதன் கீழப் புறம் பிராமி மொழித் தொடர்களும் உள்ளன. பின் புறத்தில் வலப் புறம் நோக்கி நிற்கும் காளைச் சின்னம் உள்ளது. இந் நாணயங்களின் காலம் கி.மு. 2—ம் நூற்றாண்டு என டாக்டர் தாஸ் குப்தா கருதுகின்றார்.

### ஆ. அரும்பரா நாணயம்

அரும்பரா நாணயங்கள் — பஞ்சாப் மாநிலத்தில் குர்தாஸ்பூர் மாவட்டத்தின் ஒரு பகுதியில் வாழ்ந்த பழங்குடி மன்னர்களால் வெளியிடப்பட்ட இவை சதுர வடிவிலுள்ள செப்பு நாணயங்கள். நாணயத்தின் முன் புற இடப் பக்கத்தில் வேலியிட்ட மரமும் வலப் பக்கத்தில் மரத்தை நோக்கி நிற்கும் யானையும் உள்ளன. பின் புறத்தில், இடப் பக்கம் மூன்றடுக்கு மாடியுள்ள மண்டபமும் வலப் பக்கம் திரிசூலமும்

காணப்படுகின்றன. முன் புறத்தில் கரோஷ்டி மொழியில் சொற்களும் பின் புறத்தில் பிராமி மொழியில் ஒரு சொற்றொடரும் உள்ளன.

நாணயவியல் அறிஞர்கள் அரும்பரா நாணயங்களின் காலம் கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

**இ. உதேஹாகி நாணயம்**

உதேஹாகி நாணயங்கள் இராஜஸ்தான் மாநிலத்தில் ஜெய்ப்பூர் நகரின் அருகே வாழ்ந்த பழங்குடி அரசர்கள் வெளியிட்ட நாணயங்களாகத் தெரிகின்றன. இவை சதுர வடிவிலுள்ள செப்பு நாணயங்கள். நாணயத்தின் முன் புறத்தில் நான்கு சிறு வட்டங்கள் இணைந்துள்ளன. உஜ்ஜியினி இலச்சினை, இரண்டு மீன்களுள்ள தொட்டி, வேலியிட்ட மரம் ஆகியவற்றையும் அவற்றின் கீழே பிராமி எழுத்தில் எழுதப் பெற்ற ஒரு சொற்றொடரையும் காண முடிகிறது.

## குறைபாடுள்ள நாணயங்கள்

நாணயங்கள் தயாரிக்கும்போது சில நாணயங்களில் வெட்டு ஏற்படலாம்; சிலவற்றில் முத்திரை சரியாக பதியாமலோ இரண்டு முறை அழுத்தமாகப் பதிந்தோ காணப்படலாம். இன்னும் ஒரு சில நாணயங்களில் ஒரு பக்கம் மட்டும் முத்திரை பதிந்து, மறு பக்கம் ஏதும் பதியாமல் வெற்றிடமாக இருக்கலாம். இத்தகைய குறையுள்ள நாணயங்களைத்தான் நாணயவியலார்கள் குறைபாடுள்ள நாணயங்கள் என்று அழைக்கின்றனர்.

## நாணயங்கள் அச்சடித்த இடங்கள்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் புதையல் பொருள் மூலமாகவும் ஆற்றுப்படுக்கைகளிலும், தனியார் மூலமாகவும் ஏராளமான நாணயங்கள் கிடைத்து வருகின்றன. ஆனால், அவை எப்படி, எதன் உதவியால் செய்யப்பட்டன? எங்கு செய்யப்பட்டன? போன்ற விவரங்கள் நமக்கு அதிகமாகக் கிடைக்கவில்லை.

இருப்பினும், நாணயங்களை அச்சிட்ட இடங்கள், அச்சிடவும் எண்ணவும் பயன்படுத்தப்பட்ட கருவிகள் சில ஆங்காங்கே கிடைத்து வருகின்றன.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் மன்னார் கோவில் பிரம்மதேசம் அருகே கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஒரு கல் மண்டபத்தில் நாணயக்கூடம் ஒன்று இருந்துள்ளது. பாண்டிய மன்னர்கள் செம்பு நாணயங்களை இங்கு அச்சடித்து உள்ளனர்.

பண்டைய காலத்தில் தலைமைப் படைப் பிரிவுகள் உள்ள இடங்களில் தான் இத்தகைய நாணய உற்பத்தி மையங்கள் இருந்துள்ளன. அந்த வகையில், பாண்டிய அரசின் படைத்தளம் இங்கு இருந்துள்ளது. மிகவும் பழமையான இந்த ஊரில் இன்றைக்கும் பலத்த மழை பெய்கிற நேரங்களில் இந்த மண்டபத்தைச் சுற்றிலும் மீன் உருவம் பொறித்த செம்பு நாணயங்கள் நிரம்பக் கிடைக்கின்றன. அப்போது கம்பீரமாக காட்சியளித்த இந்த நாணய அச்சுக்கூடம் இப்போது மடம் போன்று காட்சியளிக்கிறது.

## பழங்காலத்தில் நாணயங்கள் அச்சடிக்கும் முறை

இந்தியாவில் நாணயங்கள் அச்சடிப்பு "பாணினி" காலத்திலேயே தொடங்கிவிட்டது. கி.மு. 5–ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கருதப்படும் பாணினியின் அஷ்டாதியாயி என்ற நூலில் முத்திரை குத்த பெற்ற உலோகத் துண்டுகளைப் பற்றி மிகத் தெளிவான குறிப்புகள் காணப்படுகின்றன. இதிலிருந்து, பாணினி காலத்தில் நாணயங்கள் நாடு முழுவதும் பரவியிருந்தன. என்றும் அதற்கு முன்பு கி.மு. 6–ஆம் நூற்றாண்டிலேயே நாணயங்களின் அச்சடிப்பு தோன்றிவிட்டது என்றும் கருதப்படுகிறது.

இந்தியாவில் எந்தப் பழைய நூலிலும் நாணயங்கள் அச்சடித்த விதம் பற்றி எவ்விதச் செய்தியுமில்லை. ஆனால், கௌடில்யர் எழுதிய 'அர்த்த சாஸ்திரத்தில்' கள்ள நாணயக்காரர்களைப் பற்றியும் நாணயங்கள் செய்யப் பயன்பட்ட உலோகங்கள் பற்றியும் குறிப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைக்கின்றன.

ஆனால் பண்டைய நாணயங்களை ஒப்பு நோக்கி பார்த்தால் அவற்றை அச்சடிக்க மூன்று வகையான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அறியலாம்.

முதல் முறையில், தேவையான எடையளவில் அமைந்த நாணயத் தகடுகளை நெருப்பில் காய்ச்சிப் பழுக்க வைத்து, அவற்றின் மீது பல்வேறு இடங்களில் வெவ்வேறு அடையாளங்கள் கொண்ட முத்திரைகள் தனித்தனியே குத்தப்பட்டுள்ளன.

இந்த முறையினால் இத்தகைய நாணயங்களுக்கு "முத்திரை நாணயங்கள்" என்ற பெயர் வழக்கிற்கு வந்தது. இந்த முறை அச்சடிப்பில் நாணய வரலாற்றின் தொடக்க நிலைக் கூறுகள் நமக்கும் புலப்படும் இரண்டாவது முறையில் வார்ப்பட அச்சில் நாணயங்கள் உருவாகின. இந்த முறையில், முன் பக்கம், பின் பக்கமான இரண்டு வார்ப்பட அச்சுக்கள் ஒன்றாக ஆக்கப்பட்டு, அதனுள் உலோகக் குழம்பை ஊற்றிச் சூடு ஆறியதும் நாணயங்களைப் பெயர்த்து எடுத்தனர்.

இந்த முறையில் அதிக அளவில் நாணயங்களைச் செய்யத் தனித் தனியாக வார்ப்பட அச்சுக்களை வரிசையாக ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வைத்து, அவற்றிற்குப் பொதுவான வழியை அமைத்து. அதன் வழியாக உலோகக் குழம்பை ஊற்றித் தனித் தனியான வார்ப்பட அச்சுக்களுக்குக் குழம்பைப் பரவச் செய்து, மிகுதியை வடியச் செய்தனர். சூடு ஆறியதும், மண்ணால் செய்யப்பட்ட அந்த வார்ப்படங்களை உடைத்து, நாணயங்களை மொத்தமாக எடுத்தனர்.

மூன்றாவது முறையைத் தகட்டச்சுப் பதிவால் செய்தனர். இதில் படிப் படியாக இரு வில்லைகள் இருந்தன. முதல் நிலையில், நாணயத் தகட்டின் ஒரு பக்கத்தில் உலோகத்தினால் செய்யப்பட்ட அச்சைக் கொண்டு இலச்சினையைப் பதித்தனர்.

இரண்டாவது நிலையில், இரண்டு தனித் தனியான உலோக அச்சுக்களைக் கொண்டு நாணயத் தகடுகளின் இரு புறமும் பதித்தனர். இந்த இரட்டைத் தகட்டச்சுப் பதிவு ஒரே தகட்டச்சுப் பதிவைக் காட்டிலும் சிக்கலானது. இந்த முறையில் தகட்டில் முன்புறம் குத்த வேண்டிய அச்சை ஓர் இரும்புச் சதுரக் கட்டியின் மேற்பரப்பில் சற்றுக் குழிவாகத் தாழ்வான பகுதியில் பொருத்தி வைப்பார்கள். இந்த தாழ்வான பகுதி

நாணயத்தின் அமைப்பிற்கேற்பச் சதுரமாகவோ, நீள் சதுரமாகவோ, வட்ட வடிவமாகவோ இருக்கும்.

தாழ்வான பகுதியில் அச்சை வைத்த பிறகு, அதன் மேல் அச்சின் அளவுள்ள சூடேற்றிய மெல்லிய நாணயச் செப்புத் தகட்டை வைப்பார்கள்.

இத் தகட்டின் மேற்பகுதியில் பின்புறம் குத்த வேண்டிய அச்சை வைப்பார்கள். இந்த அச்சைப் பிறகு சிறு சம்மட்டி கொண்டு பலமுறை அடிப்பார்கள். அச்சுகளும் சூடேற்றிய தகடும் இரும்புக் கட்டியின் தாழ்வான பகுதியில் சிக்கிக் கொள்வதால் அவை வெளிவர முடியாதபடி அதே இடத்தில் இருக்கும். பக்கவாட்டிலும் அசையாது சில முறை சம்மட்டி கொண்டு அடித்த பின்பு, சூடேற்றிய செம்புத் தகட்டை வெளியே எடுத்து விடுவார்கள். இந்த தகடுதான் நாணயமாகிறது. அந்தத் தகட்டின் முன்புறமும் பின்புறமும் அரசனின் இலச்சினைகள் பதிவாகி இருக்கும்.

பெரிய தகடுகளைச் சூடேற்றி, அடித்து அடித்து மெல்லியதாக்கிப் பிறகு நாணயத்தின் எடைக்கும் அளவிற்கும் தக்கபடி வெட்டிச் சிறு சிறு துண்டுகளாக்கி வைத்துக் கொண்ட பின்னரே மேலே சொன்ன அச்சடிக்கும் முறை கையாளப்படும் இரட்டைத் தகட்டச்சுப் பதிவுமுறை கிரேக்க உரோமானியர் தொடர்பால் வந்ததாக வி.ஏ. சுமித் கூறிகிறார்.

இந்த மூன்று முறைகளுள் இறுதியான தகட்டச்சுப் பதிவு முறையைச் சோழர்கள் கையாண்டனர்.

## முத்திரை நாணயங்களின் ஆக்கம் மற்றும் நாணயங்கள் செய்முறை

உலோகத்தினை முதலில் மட்கலத்தில் உருக்கிய பின்னர் கலப்புப் பொருளைச் சேர்த்து, அதைத் தூய்மையாக்கி, சம்மட்டியால் அடித்து, நீண்ட தகடுகளாகச் செய்து, கத்தரிக்கோலால் அவற்றைச் சின்னஞ்சிறு துண்டகளாக வெட்டி, இறுதியில் முத்திரைப் பொறிகளைக் கொண்டு அவற்றில் முத்திரையிட்டனர்.

நாணயங்கள் சரியான எடையுள்ளனவாக இருக்க வேண்டுமென்பதற்காக அக் காலத்தில் தகடுகளைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி எடுத்திருக்கின்றனர்.

முன் பக்கத்தில் ஐந்து முத்திரைகள் பொறிக்கப்பட்டவை பெரும்பாலும் நந்தர்களாலும், மௌரியர்களாலும் வெளியிடப்பட்டவை.

## சாதவாகனர் கால நாணயம் அச்சிட்ட கருவி

சாதவாகனர் காசுகள் சிலவும், காசுகள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட வார்ப்புக் கூடுகள் சிலவும் காஞ்சிபுரத்தில் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மொத்தம் ஐந்து வார்ப்புக்கூடுகளுள் மூன்று 'வசிட்டி புத்ரபுலுமாயி' காலத்தையும், இரண்டு 'வசிட்டி புத்ர சதகர்ணி' காலத்தையும் சார்ந்தன. மூன்று வார்ப்புக் கூடுகளுள் இரண்டு சாம்பல் நிறமுடையனவாகவும் ஒன்று சிகப்பு வண்ணம் உடையதாகவும் காணப்படுகின்றன. இவ் வார்ப்புகளின் முன் பக்கம் யானையின் உருவமும் அதைச் சுற்றி மன்னனது பெயரைத் தெரிவிக்கும் ஓரிரு எழுத்துக்களும் பின்பக்கம் "உஜ்ஜயினி" குறியீடும் காணப்படுகின்றன.

வசிட்டிபுத்ரா சதகர்ணி காலத்தியதான இரண்டு வார்ப்புக் கூடுகளுள் முதல் வார்ப்பு அகழாய்வுக் குழியில் 5.35 மீட்டர் ஆழத்தில் கிடைத்திருக்கிறது. முன் பக்கம், இடப் பக்கம் திரும்பிய நிலையிலுள்ள யானையின் உருவமும் மன்னன் பெயரும் காணப்படுகின்றன. பின்பக்கம் என்ன உள்ளது என்று அறிய இயலாவண்ணம் மிகவும் தேய்ந்துள்ளது. இரண்டாம் கூடு 5.15 மீட்டர் ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக் கூட்டிலும் முதல் கூட்டில் உள்ளவாறே காணப்படுகிறது.

இவ் வார்ப்புகளைக்கொண்டு தமிழகத்தின் வட பகுதியில் சாதவாகனர்களின் காசுகள் புழகத்தில் இருந்திருக்க வேண்டுமென்பது தெரிகிறது.

## முத்திரை நாணயங்கள் தயாரிக்கும் பழங்கால கடுமண் அச்சு

காரைக்கால் பகுதியிலுள்ள மாத்தூர் கிராமத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் பழங்கால முத்திரை நாணயங்களைத் தயாரிக்கப் பயன்படுத்திய கடுமண்ணாலான அச்சு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பழங்காலத்தில் மன்னர்களால் மட்டுமன்றித் தன்னாதிக்கம் பெற்ற பல்வேறுபட்ட நாடுகளில் வணிகர்கள் நலனில் அக்கறை கொண்ட

வியாபாரக் குழுக்களாலும்கூட முத்திரை நாணயங்கள் தயாரித்து வெளியிட்டுள்ளன.

தற்போது கண்டெடுக்கப்பட்ட வட்ட வடிவிலான அச்சானது வட்டம், செவ்வகம் மற்றும் ஒழுங்கற்ற அமைப்பு ஆகிய மூன்று வகை வடிவம் கொண்ட நாணயங்களைத் தயாரிக்கப் பயன்படும் குழிகளைக் கொண்டிருக்கிறது.

இம் மாதிரியான 11 குழிகளைக் கொண்ட வட்ட வடிவிலான அச்சு ஒன்று ஒரிசா மாநிலம் புவனேஸ்வரம் அருகிலுள்ள சிசுபாலா என்ற இடத்தில் கி.பி. 1948–இல் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாரய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்டதோடு வடிவமைப்பிலும் தொழில்நுட்பத்திலும் ஒத்துப் போகிறது.

இந்த அச்சின் மூலம் ஒரே கால கட்டத்தில் மூன்று வகையான வடிவங்களை உடைய நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன எனவும் எண்ணிக்கையில் மட்டும் வியாபாரக் குழுவால் வெளியிடப்பட்டிருக்கலாம் எனவும் தெரிய வருகிறது.

## நாணயங்கள் எண்ணும் அச்சு மரப் பலகை

திருவிதாங்கூர் அச்சுச் சாலை (நாணயப்படி தயாரிக்குமிடம்) முதல் முதலில் கி.பி. 1790–ஆம் ஆண்டு பத்மனாபபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின், திருவனந்தபுரம், கொல்லம், மாவேலிக்கரை, பாவூர் ஆகிய இடங்களில் நாணயக் கூடங்கள் தொடங்கப்பட்டன இந்த நாணயக் கூடங்களில் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களில் பலவகையான நாணயங்கள் உருவாக்கப்பட்டன. இந்த அச்சுச் சாலையில் முத்திரையிட்ட தங்கக் காசு, துலாபாரக் காசு, சின்னக் காசு, சிறிய காசு, அரவிக் காசு, சுல்தான் காசு, கொச்சுச் சக்கரம், சிறிய சக்கரம், இரட்டைச் சக்கரம் போன்ற சக்கர வகைக் காசுகளும் வெள்ளிப் பணம் போன்ற பலவகைக் காசுகளும் உருவாக்கப்பட்டன.

பலவகை உலோகங்களினால் உருவாக்கப்பட்ட இக் காசுகளில் குறைந்த அளவு எடை முக்கால் மஞ்சாடியாகும். எனவே, ஒவ்வொன்றாக எண்ணுவது மிகக் கடினம். இவற்றை நூறு, இருநூறு என்று வேகமாக

இவற்றை எண்ணுவதற்கு இது போன்ற மரப் பலகை அச்சுக் குழிகள் காணப்படும். இந்த நாணயப் படியின் முன்புறத்தில் 200 குழிகளும் பின்புறத்தில் 100 குழிகளும் உள்ளன.

இருநூறு ஆண்டுகளுக்கு முந்தைய மரப் பலகையில் அலங்கார வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்ட பழங்கால நாணயங்கள் எண்ணும் மரப் பலகை அச்சு நாகர்கோவிலில் செதுக்கப்பட்டுள்ளது.

## கி.பி. 1949–க்குப் பின் நாணயம் அச்சிட்ட முறை

நாணயத் தயாரிப்புக்கான நாணயச் சாலைகளை 'மிண்ட்' என்று ஆங்கிலத்தில் அழைப்பர். மும்பையிலும் கொல்கத்தாவிலும் இந்தியாவின் மிகப் பெரும் நாணயச் சாலைகள் உள்ளன. இந்த இரு சாலைகளையும் 175 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கில அரசின் இராயல் பொறியாளர்கள் கட்டினார்கள். "மாஸ்டர் ஆப் தி மிண்ட்" என்ற புதிய பதவி ஏற்படுத்தப்பட்டு, போர்பஸ் என்ற ஆங்கிலேய இராணுவ அதிகாரி இந்தப் பதவியில் நியமிக்கப்பட்டார். கொல்கத்தாவின் முதல் மிண்ட் மாஸ்டரான இவரது சிலை கொல்கத்தா கதீட்ரலில் அமைக்கப்பட்டுள்ளது.

நாணயங்கள் செய்வதற்கு விலை மிகுதியான இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. முதலில் நாணயச் சாலைகளை வடிவமைத்தவர்கள் அடிப்படையாகக் கையாண்ட நாணயத் தயாரிப்பு முறைகளைத் தான் இன்றும் கடைபிடிக்கிறார்கள். ஆனால், இடைக் காலங்களில் இயந்திரங்களின் வளர்ச்சியும் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. ஆரம்பத்தில் மிண்ட் உலைகளுக்கு எரிபொருளாக நிலக்கரியைத்தான் பயன்படுத்தினார்கள். பின், எரிவாயுவும் தற்போது மின்சாரமும் பயன்படுத்தப்படுகின்றன.

1940 வரைக்கும் அடித்து வந்த வெள்ளி ரூபாய் நாணயத்தில் 11 பங்கு வெள்ளியும் 1 பங்கு செம்பும் கலந்திருந்தன. 1930–களுக்கு மேல் வெள்ளியின் விலை ஏறிக் கொண்டே போனதால், மக்கள் நாணயங்களை உருக்கி விற்பார்கள் என்று அரசு அஞ்சியது. இதனால், இந்த ரூபாய் நாணயங்களை மாற்றி அமைத்தார்கள். அரைப் பங்கு வெள்ளியும் அரைப் பங்கு கலப்பு உலோகமும் சேர்த்து வார்ந்த நாணயங்கள் புழகத்திற்கு வந்தன.

இரண்டாம் உலகப் போரின் போது நிக்கலுக்கு தட்டுப்பாடு வந்தது. எனவே, ஒரு ரூபாய், அரை, கால் ரூபாய் நாணயங்கள் பித்தளையில் தயாரிக்கப்பட்டன.

வெண்கலத்தில் செய்யப்பட்ட காலணா பத்தாண்டுக் காலத்துக்குள் 4 முறை மாற்றி அமைக்கப்பட்டன.

முதலில் இது பிரிட்டனின் அரைப் பென்னி வடிவில் 75 தானிய எடையுடன் இருந்தது. இரண்டாம் உலகப் போரின் போது உலோகத் தட்டுப்பாட்டால் வெண்கலக் காலணாவை மாற்றி வாஷர் போலிருக்கும் செம்புக் காலணா வந்தது. இதனைப் பொத்தல் காலணா, ஓட்டைக் காலணா என்பார்கள். 30 தானிய எடை கொண்டது. இது போருக்குப் பிறகு முழுக் காலணாவாக வந்தது முதலில் 60 தானிய எடை இருந்த இது பின் 45 தானிய எடையாகக் குறைக்கப்பட்டது.

அந்த நாளில் பொது மக்களுக்கு மிகவும் பயன்பட்ட நாணயம் காலணா. இந்திய நாணய சாலைகளில் வர்த்தக நாணயங்களில் பாதிக்குமேல் காலணாக்கள்தாம். 1950 வரை காலணாவுக்குக் குறைந்த மதிப்புடைய தம்படிகளும், அரைத் தம்படிகளும் அடிக்கப்பட்டு வந்தன. போருக்கு முன் வரை சென்னை நகரில் காலணாவுக்கு அதிகப் புழக்கம் இருந்தது. காலணா நாணயங்களைத் தயாரிக்கும் செலவு அவற்றின் மதிப்புக்கு மேல் போய்விட்டதால் அவற்றைத் தயாரிப்பது நிறுத்தப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் விமானங்கள் கொல்கத்தாவைத் தாக்கக்கூடும் எனக் கருதி இலாகூரில் ஒரு நாணயச் சாலை தொடங்கப்பட்டது. இப்போது அது பாகிஸ்தானோடு சேர்ந்துவிட்டது.

1948 வரை நிஜாமிடம் இருந்த ஹைதராபாத் நாணயச் சாலை ஒரு நாளைக்கு 3,50,000 வரை நாணயங்களைத் தயாரிக்கும் திறனுள்ளதாக இருந்தது. இப்போது இது மும்பை நாணயச் சாலையின் கிளையாக உள்ளது.

இந்தியா சுதந்திரம் பெற்ற பின் நாணயங்களின் பிரிட்டன் அரசரின் தலைக்குப் பதிலாக அசோக சின்னம் பொறிக்கப்பட்டது.

சென்னையிலும் ஒரு நாணயச் சாலை கி.பி. 1601—இல் அமைக்கப்பட்டது. இயந்திரங்களும் அமைக்கப்பட்டன. பின்னாளில் அது மூடப்பட்டது.

## நாணயங்களைப் பாதுகாக்கும் முறைகள்

### (அ) தங்க நாணயங்கள் பாதுகாக்கும் முறை

தங்க நாணயங்களைத் தனியாக மற்ற உலோக நாணயங்களோடு சேர்க்காமல் வைக்க வேண்டும். அவற்றினைத் தனியாகத் தாளில் (Tissue Paper) பாதுகாப்பாக வைக்க வேண்டும். அவற்றில் ஏதேனும் பாசியோ, கறையோ மணல் படிந்து இருந்தாலோ அதனை நீர்த்த நைட்ரிக் அமிலம் மூலம் கவனமாகத் தூய்மை செய்ய வேண்டும்.

### (ஆ) செப்புக் காசுகளைத் தூய்மை செய்யும் முறை

பச்சை படிந்த நாணயங்களைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திரவங்களுள் ஏதேனும் ஒன்றில் மூழ்க வைத்துப் பச்சை நிறம் நீங்கும் வரை தூய்மை செய்ய வேண்டும்.

**ரோச்சல் கார உப்புத் திரவம்**

**(Alkaline Rochelle Salt Solution)**

50 கிராம், சோடியம் ஹைடிராக்சைடை ஒரு லிட்டர் காய்ச்சி வடித்த நீரில் கரைத்து இத்துடன் 150 கிராம் ரோச்சல் உப்பு எனப்படும் பொட்டாசியம் டார்ட்ரேட் கரைத்த கரைசல்.

**கார கிளிசரால் திரவம்**

150 கிராம் எடையுள்ள எரிசோடாத் துணுக்குகளை ஒரு லிட்டர் காய்ச்சி வடித்த நீரில் கரைத்து 50 கிராம் கிளிசரின் சேர்க்கப்படுகிறது. இது இரண்டாம் வகைத் திரவம்.

மேலே கூறப்பட்டுள்ள திரவங்களுள் ஏதேனும் ஒன்றில் செம்பு நாணயங்களை நான்கு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பின் நாணயங்களை திரவத்தில் இருந்து எடுத்து தூய்மையான நீரில் கழுவ வேண்டும். கழுவும்பொழுது மெல்லிய நைலான் துடைப்பானைக்

கொண்டு தேய்க்க வேண்டும். இச் செய்முறைக்குப் பின்பும் பச்சை நிறம் தங்கி இருந்தால், நாணயங்களைப் புதிய திரவத்தில் இன்னும் நான்கு மணி நேரம் ஊற வைக்க வேண்டும். செம்பு நாணயங்களில் பச்சை முழுவதும் நீங்கும் வரை இந்த செய்முறையைத் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டும்.

பின்னர், அது நீர்த்த கந்தக அமிலத்தில் அரை மணி நேரம் ஊர வைக்கப்படுகிறது. தேய்ப்பதற்கு மெல்லிய துகிலியைப் பயன்படுத்த வேண்டும். பின்பு குளிர்ந்த நீரில் கழுவிப் பாலிவினைல் அசிட்டேட் (Polyvinyl Acetate in sulphar free toluene) பாதுகாப்புத் திரவப் பூச்சு இருமுறை பூசிப் பாதுகாக்க வேண்டும்.

## (இ) நாணயங்களைப் பாதுகாக்கும் பொதுவான முறைகள்

1. நாணயங்களைத் தனித் தனியாக எடுத்துச் சிறிய காகித உறைகளில் போட்டு, உறையின் மேல் நாணயத்தின் மதிப்பு, காலம், பேரரசு போன்றவற்றினை குறித்து வைக்க வேண்டும் நாணயங்களை டப்பா, பாத்திரம் போன்றவற்றில் குவியலாக ஒன்றையொன்று உரசும்படி வைக்கக்கூடாது.

2. சாய்ந்தவாறு உள்ள மேசையில் நாணயங்களை வைக்க வேண்டும். காரீய, வெள்ளிய நாணயங்களை பிளாஸ்டிக் பெட்டியில் வைக்க வேண்டும்.

3. நாணயங்களைச் சுத்தம் செய்ய புளி, எலுமிச்சை கொண்டு தூய்மை செய்யக் கூடாது. புளி, எலுமிச்சை ஆகியவற்றில் உள்ள சிட்ரிக் அமிலத்தினால் நாணயங்கள் அப்போதைக்குப் பளபளப்பாகின்றன. ஆனால், இவை செம்பின் மேற்புறத்தை நிறம் மாற்றி கருமை படிய வைத்துவிடும். எனவே, புளி, எலுமிச்சை போன்றவற்றை வைத்துத் தேய்த்து நாணயங்களைத் தூய்மைப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

4. நாணயங்களைத் தூய்மை செய்ய அடர்ந்த கந்தக அமிலம், அடர்ந்த நைட்ரிக் அமிலம், அடர்ந்த ஹைடிரோ குளோரிக் அமிலம் போன்றவற்றைப் பன்படுத்தக் கூடாது.

5. தூய்மையான தண்ணீரில் நாணயங்களை கழுவியவுடன் துணியினால் நன்கு துடைத்து விடுவது முக்கியமானது.

## (ஈ) மின்பகுப்பு முறை (Electrolytic Method)

எரிசோடா கரைசலில் நாணயங்களை எதிர்மின் துருவத்திலும் இரும்பு தகடு ஒன்றினை நேர்மின் துருவத்திலும் இணைத்து, மிகக் குறைந்த நேர் மின்சாரத்தினை மின்கலம் (Battery) மூலம் தொடர்ச்சியாக நாணயங்களில் உள்ள அசுத்தங்களுக்கு ஏற்றவாறு ஓடச் செய்து, பின்பு நாணயங்களைத் தூய்மையான நீரில் கழுவிப் பாலிவினைல் அசிடேட் பூச்சு கொடுத்துவிட வேண்டும். வெள்ளி நாணயங்களைத் தூய்மை செய்ய சோடாவிற்குப் பதிலாகப் பொட்டாசியம் சைனைடு கரைசலைப் பயன்படுத்த வேண்டும். இக் கரைசல் நச்சுத்தன்மை உடையது. எனவே, இதனைக் கவனமாகக் கையாள வேண்டும். ஈய நாணயங்களைத் தூய்மை செய்யச் சூடான அம்மோனியம் அசிட்டேடில் 20 நிமிடம் முதல் ஒரு மணிநேரம் வரை அவற்றை மூழ்க வைத்துச் சுத்தம் செய்து பாலிவினைல் அசிடேட் பூசலாம்.

## மேற்கோள் நூல்கள்


1. The Coins of India – C.J. Brown – Asian & Publication, Delhi- Madras

2. "Coins Through the Ages"
N. Mohandas, Department of Museum Publication

3. South Indian Coins –
T. Desikachari, Asian Educational Services,
New Delhi-Madras 1991.

4. சங்க காலச் சோழர் நாணயங்கள் – தினமலர் வெளியீடு இரா. கிருஷ்ணமூர்த்தி, – 1986 பதிப்பு

5. பாண்டியர் பெருவழுதி நாணயங்கள் – தினமலர் வெளியீடு இரா. கிருஷ்ணமூர்த்தி, – 1987 பதிப்பு

6. Sangam Tamil Coins R. Krishnamurthy 1997 Publication.

7. History of the Coinage Territories of the East India Company in the India-Peninsula.

8. History of Madura Country – Nelson – 1868

9. The Coins of Haider Ali and Tipu Sulthan – J.R. Henderson, Asian Educational Services, New Delhi- Madras 2001.

10. Marg Publications of Kings and Coins. Guest Edited-Martha L. Carter Vol. XLV No. 4. Dec. 1997

11. தமிழர் காசு இயல் – நடன காசிநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

12. Kanchi Pallava Coins – K.A. Thirugnanasampandam, 1989 Edition.

13. Vijayanagar Coins – N. Sankaranarayanan, Museum Publication – 1977

14. இராசஇராசன் வரலாற்றுக் கூடம்—

மா. சுந்தரமூர்த்தி, கீ. சீதரன், இரா. ப. கருணானந்தன். தமிழ்நாடு அரசு தொல்பொருளியியல் துறை — 1985.

15. கருவூர் அகழ்வைப்பகம் — தமிழ்நாடு அரசு தொல்பொருளியல் துறை வெளியீடு

16. கொங்கு சோழர் நாணயங்கள் —
முனைவர் க. அ. புவனேஸ்வரி

17. திருமலை மன்னர் கையேடு, வேதாசலம் தமிழ்நாடு தொல்பொருளியல் துறை வெளியீடு

18. புதுக்கோட்டை மாவட்ட வரலாறு
ஜெ. ராஜாமுகமது, புதுக்கோட்டை வெளியீடு — 1992

19. சிவகங்கைச் சீமை வரலாறு—
எஸ். எம். கமால், இராமநாதபுரம் சிவகங்கை

20 Care of Museum Objects-
வே. ஜெயராஜ், அரசு அருங்காட்சியகம், சென்னை

21 தொல்லியல் கருத்தரங்கு மலர் தொல்லியல்துறை வெளியீடு

22 ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழா மலர். திருச்சிராப்பள்ளி நாணவியல் கழகம் 2003

23 பழங்காசு—மரு. சுசீலாவதி சீனிவாசன், ஜூலை 2002—டிசம்பர் 2002



Bent bar, Gandhara Janapada, 6th Cent. B.C., Silver.



Punch marked coin, Andhra Janapada, 5th -4th Cent. B.C., Silver.



Uninscribed cast coin, Kausambi, 3th Cent. B.C., Copper.



Silver Coin of Appollodotus I



Silver Coin of Appollodotus I
Indo-Greek 160-150 B.C



Tetradrachm of Indo-Greek King Menander 1st Cent. B.C., Silver.



Coin of Western Kshatrapa, Rudra Simha II, *304-306 AD*, *Sliver*



Tetradrachm of Indo-Greek King Eucratides, 1st Century B.C., Silver.



Dinar of Kushana King Kanishka, c. 1st Cent. A.D., Gold.



Coin of satvahana King Vashisthiputra Pulumavi, 1st Century A.D., Silver.



Uninscribed cast coin, Kausambi, $3^{rd}$ - $2^{nd}$ Century B.C., Copper.



Dinar of Gupta King Chandragupta II, Couch Type, $5^{th}$ Century A.D., Gold.



Dinar of Gupta King Samudragupta, Ashvamedha Type, $5^{th}$ Cent. A.D., Gold.




Dinar of Gupta king Kumargupta, Karttikeya type, $5^{th}$-$6^{th}$ Cent. A.D., Gold.



Dinar of Gupta King Chandra Gupta-II,
Chhatra type, $4^{th}$ – $5^{th}$ Century A.D., Gold.



Coin of Chola King, Raja Raja I, 985-1014 A.D., Base Gold.



Coin of Chola King Kulottunga I, 1070-1120 A.D., Gold.



Tanka of Delhi Sultan Muhammad bin Tughluq,
725-752 A.H.=1325-1351 A.D., Gold.



Mohur of Shihabuddin Muhammad Shahjahan,
1037-1068 A.H.=1628-1658 A.D., Gold.



Mohur of Aurangzeb 'Alamgir', 1068-1119 A.H.=1658-1707 A.D., Gold.



Gold Mohur of East India Company, Bengal Presidency, Benaras Mint,
$17^{th}$-$18^{th}$ Century A.D., Gold



Tanka of Delhi sultan Shamsuddin Iltutmish
607-633 A.H.=1210-1210 A.D., Billon.



Tanka of Delhi Sultan Alauddin Muhammad,
695-715 A.H.=1296-1316 A.D., Gold.



Tanka of Delhi Sultan Qutbuddin Mubarak,
716-720 A.H.=1316-1320 A.D., Gold.



Tanka of Malwa Sultan Ghiyath Shah,
873-906 A.H.=1469-1500 A.D., Gold



Tanka of jaunpur Sultan Shamsuddin Ibrahim Shah,
804-844 A.H.=1402-1440 A.D., Gold.



Tanka of Bahmani Sultan Mohammad Shah III,
867-887 A.H.=1463-1482 A.D., Gold.



Tanka of Sher Shah,
945-952 A.H.=1538-1545 A.D., Gold.



Gold coin of Akbar



Gold coin of Akbar
Mehralri type 1556-1605 A.D.,



Mehrabi of Jalaludidin Muhammad Akbar,
963-1014 A.H.=1556-1605 A.D., Gold.



Asrigarh Mohur of Jalaludidin Muhammad Akbar,
963-1014 A.H=1556-1605 A.D., Gold



Gold Mohur of Jahangir
Zodic type Tarrus 1605-1628 A.D.,




Gold Mohur of Jahangir



Mohur of Nuruddin Jahangir with portrait
1014-1037 A.H.=1605-1628 A.D., Gold



Zodic Mohur of Nuruddin Jahangir, 1014-1037 A.H.=1605-1628 A.D., Gold



Single Swami Pagoda, South India, 18th Century A.D., Gold.



Shiva- Parvati, Pagoda of Mysore Sultan Haider Ali,
18th -19th Century A.D., Gold.



Gold Mohur of Awadh Nawab Ghaziuddin Haider,
1230-1234 A.H.=1814-1819 A.D.
(As Nawab) & 1234-1243 A.H.=1819-1827 A.D. (As King), Gold.



070 A.D.-1118 A.D., Gold Mohur of East India Company,
$17^{th}$-$18^{th}$ Century A.D., Gold.



A Painting depicting Minting of coins during Sikh Period,
in the National Museum Collection.
Legend in Gurumukhi : Rupai par Mohar Sikke Sarkari Lagda Hai

